# செம்மணி

நிலம் 2 துகள் 64 வள்ளுவர் ஆண்டு 2052, 09 -15 ஐப்பசி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-



04




புலித்தேவன், நடேசன் ஆகியோரை நாமே சுட்டோம்

05



சீனப் பட்டுப்பாதை திட்டத்தால் இந்து சமுத்திரத்தில் கடல்கோள்

சேலையில் கவர்ச்சி காட்டிய பிரீத்திசிங் 17

## மாகாண போக்குவரத்துக்கு தொடர்ந்தும் தடை நீடிப்பு

கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து எதிர்வரும் 21 ஆம் நாள் வரையில் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தைத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் ஊரடங்கில் இருந்து நாடு விடுவிக்கப்பட்ட போதும், மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்துக்குத் இந்த மாதம் 15ஆம் நாள் வரையில் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனையே இப்போது மேலும் ஒரு வாரத்திற்கு நீடித்திருக்கிறார்கள்.

கொரோனா பெருந்தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்பு குறைந்து வந்தாலும் நாட்டை முழுமையாகத் திறந்து விடுவது கொவிட்-19 பரவலுக்கும் அதன் 5ஆவது அலைக்கும் வழிவகுத்துவிடும் என்று மருத்துவத் துறையினர் எச்சரிக்கின்றனர். இதன் காரணமாகவே மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துக்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

# 2022 முற்பகுதியில் மாகாணத் தேர்தல்!

### பழைய விகிதாசார முறையின் கீழ் நடக்கும்



கொழும்பு, ஐப்பசி 9

தடைப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடக்கும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் மாகாணத் தேர்தல்களை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் முறை சீர்திருத்த தெரிவுக்குழுவில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் பக்கம் 02

## பதின்ம வயதினருக்கு தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, ஐப்பசி 9

கொரோனா பெருந்தொற்றில் இருந்து காத்துக் கொள்வதற்காக 18, 19 வயதினருக்குத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த மாதம் 21ஆம் நாள் முதல் பதின்ம வயதினருக்குத் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்படும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

அரச தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைய பிவிசர் தடுப்பூசியே பதின்ம வயதினருக்குப் போடப்படவுள்ளது என்று தரைப் படைத் தளபதியும் கொவிட்-19 தடுப்புச் செயலணியின் தலைவருமான லூட்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த வயதெல்லைக்குள் வரும் மாணவர்களுக்கு அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஊடாகவே தடுப்பூசிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பக்கம் 02

## இனப்படுகொலைத் தீர்மானத்துக்கு இலங்கை கடும் எதிர்ப்பு தெரிவிப்பு



கனடாவின் ஒன்றாறியோ சட்டமன்றத்தில் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து இலங்கை தனது கடும் கவலையைப் பதிவு செய்துள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று இலங்கைக்கான கனடா உயர் ஆணையரைச் சந்தித்து பக்கம் 02

## பால்மா விலையேற்றம் திங்களன்று வெளியாகும்

இறக்குமதி செய்யப்படும் பால் மாக்களின் புதிய விலை எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள பால்மா 16 கொள்கலன்கள் திங்கட்கிழமை விடுவிக்கப்படும் என்றும் அதற்கான 11 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைத்துள்ளதாகவும்



இறக்குமதியாளர்களின் பிரதிநிதி தெரிவித்தார் என்று டெய்லி மிரர் இணையத்தளம் தெரிவித்திருக்கிறது.

புதன் கிழமை முதல் சந்தைக்கு பால் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தையில் பால் மாவுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பால்மா இறக்குமதியாளர்களின் கருத்துப்படி ஒரு பக்கம் 02

## பதவி விலகினார் தேர்தல்கள் ஆணையர்

கொழும்பு, ஐப்பசி 9

வடக்கு மாகாண புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா பதவியேற்கவுள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அவர் ஆளுநர் பதவியை ஏற்று முகமாகத் தற்போதைய பதவியில் இருந்து விலகிக்கொண்டார்.

2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அதே ஆண்டு தேர்தல்கள் அணைக்குவின் உறுப்பினராக ஜீவன் தியாகராஜாவிற்கு அரச தலைவர் கோட்டாபய ராஜபக் ஷவால் நியமனம் வங்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண ஆளுநராக 2019 முதல் பதவி வகித்தவர் திருமதி பி.எம். எஸ்.சாள்ஸ். அவர் பதவி விலகிச் செல்வதைத் தொடர்ந்து பக்கம் 02

## 4 கொலையாளிகளை பிடிக்க திணறும் யாழ். காவல்துறை

யாழ்ப்பாணம், வைகாசி 9

யாழ்ப்பாணம் குருநகரில் இளைஞர் ஒருவர் திட்டமிட்டு அழைக்கப்பட்டு வாளால் வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவத்தில் தேடப்படும் முக்கிய சந்தேகநபர்கள் நால்வரைக் கைது செய்வதற்கு யாழ்ப்பாணம் காவல்துறையினர் திணறி வருகின்றனர். கொலை நிகழ்ந்து நாற்பது நாள்களுக்கு மேலாகிவிட்டபோதும் இந்த நால்வரும் இன்னும் கைது செய்யப்படவில்லை. இது குறித்து அடுத்த வழக்குத் தவணையில் யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றில் முற்பட்டு அறிக்கை வழங்கவேண்டும் என்று நேற்று உத்தரவிட்டார் யாழ். நீதிவான்.

குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஜெறன்ஸ் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் பாசையூரில் வைத்து வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது நண்பர்கள் இருவரை வாள் முனையில் பிடித்து வைத்து ஜெறன்ஸை உதவிக்கு வருமாறு அழைப்பித்து திட்டமிட்டுக் பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# பன்னாட்டு அரசியல் சதுரங்க ஆட்டம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை அரச படையினரால் தோற்கடிக்கப்பட்டதற்குப் பின்னரான ஒரு தசாப்த காலதத்தில் பன்னாட்டுச் சமூகம் தமிழர்களுக்கு உதவும், பன்னாட்டுக் கட்டமைப்புக்கள் ஊடாகவே, அதிலும் இந்தியாவின் உறுதுணையுடனேயே ஓர் அரசியல் தீர்வு அல்லது நியாயம் கிடைக்கும் என தமிழ் அரசியல் தலைவர்களால் ஒரு பிம்பம் கட்டமைக்கப்பட்டது. இந்த பிம்பத்தைக் கட்டமைத்ததில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பலவற்றுக்கும் முக்கியமான பங்குண்டு. இவற்றுக்குச் சற்றும் சளைத்ததாக இல்லாமல் அதன் பின்னர் வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரும் பன்னாட்டுச் சமூகத்தின் ஊடாகவே தமிழர்களுக்கு ஒரு விடிவு கிடைக்கும் என்கிற விம்பத்தைக் கட்டியெழுப்பினர். இந்தத் தர்க்க நியாத்தின் அடிப்படையில் இலங்கையில் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வருவது தமிர்களுக்குச் சாதகமானது என்றுகூட முன்னணித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற இன்னோரன்ன சொற்களும் இதையொட்டி தமிழ் அரசியல் களத்தின் முன்னரங்கிற்கு வந்தன. ''பூகோள அரசியல் அல்லது புவிசார் அரசியல்'' என்கிற மற்றொரு சொல்லாடலும் முக்கியமாகப் புழக்கத்திற்கு வந்திருந்தது. இந்தக் காரணங்களை முன்வைத்து இலங்கை ஆட்சியாளர்கள் மீது கடுமையான அழுத்தங்கள் ஏற்படும் என்றும் வியாக்கியானங்கள் சொல்லப்பட்டன. அந்த அழுத்தங்கள் நீர்த்துப்போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அதுவே தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் சொல்லப்பட்டன.

இவற்றில் உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் இவற்றால் மட்டுமே தமிழர்களுக்குத் அரசியல் தீர்வோ நியாயமோ கிடைக்கும் என்பதைப் போன்று எல்லாத் தமிழ் அரசியல் தலைவர்களும் சேர்ந்துகொண்டு மக்களின் தலையில் மிளகாய் அரைத்தமையைத்தான் தாங்க முடியவில்லை. பன்னாட்டு அரசியல் என்பது ஒரு சதுரங்க ஆட்டம் மாதிரி. பூகோள அரசியல் நகர்கவுகள் ஒரு சதுரங்க விளையாட்டு என்றால் அந்த விளையாட்டில் முன்னால் நிறுத்தப்படும் போர் வீரர்களாகவே பலமிக்க நாடுகளால் தமிழர்களின் பிரச்சினை கையாளப்பட்டு வருகின்றது. முன்னேறிய பலம்மிக்க நாடுகளதும் இந்தியாவினதும் நலன்களை முன்கொண்டு செல்வதற்கான ஓர் ஆயுதமாக மட்டுமே பன்னாடுகளும் இலங்கையில் தமிழர்களையும் அவர்களின் பிரச்சினையையும் பயன்படுத்துகின்றன.

அதன் மற்றொரு சுற்று தற்போது கட்டவிழத் தொடங்கியுள்ளது. தனிநாடு கேட்ட தமிழர்கள், சுயாட்சி கேட்டு, ஒற்றையாட்சிக்குள் கூட்டாட்சியின் பண்புகளைத் தேடி, வேறு வழியேதும் இல்லாமல் புதிய அரசமைப்பின் ஊடாகவாவது ஒரு தீர்வைத் தாருங்கள் என்று காத்திருந்த நேரத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்கிற கட்டத்தில் மீண்டும் வந்து நிற்கின்றது தமிழர்களின் அரசியல்.

அண்மையில் கொழும்புக்கு வந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷவர்த்தன் ஷ்ரிங்லா அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் என்று செய்திகள் வெளியாகின. இதனை இந்தியத் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்திருந்தது. 13ஆவது திருத்தத்தின் பலவீனம் போன்றே அதன் பலம் தொடர்பிலும் கண்டறிந்து செயற்படுவதன் தேவை குறித்தும் இந்தியச் செயலருடனான சந்திப்பில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச கருத்துப் பரிமாறினார் என்று அவரது செயலகம் தெரிவித்திருக்கிறது.

இதில் கவனிக்கப்படவேண்டியது தன் பங்குக்கு 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியதாக இந்தியா தமிழர்களுக்குக் காட்டிக்கொண்டது. இந்தியா சொன்னாலும் அதையெல்லாம் அப்படியே ஒன்றும் செய்துவிடமாட்டோம் என்று ராஜபக்ச காட்டிக்கொண்டதும்தான்.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாகவும் கவனிக்கப்படவேண்டியதும் ஒன்றுண்டு. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுக்களைத் தொடங்க அரச தலைவர் முன்னகர்வுகளை எடுத்தபோது, அந்த விவகாரத்தை கூட்டமைப்பின் பேச்சாளரிடம் எடுத்து வந்த தூதரிடம், பேச்சுக்கு வருவதற்கு முன்னதாக தமிழர்களுக்கு நம்பிக்கை தரத்தக்க வகையில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தச் சொல்லுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறி அனுப்பினார் என்றும் (இன்று போய் போருக்கு நாளை வா என்ற மாதிரியாம்) செய்திகள் வந்தன. அதுவும் இந்தத் தருணத்தில் கவனத்துக்குரியது.

ஆக மொத்தத்தில் இவர்கள் (கூட்டமைப்பு) சொல்வார்களாம், அவர்கள் (இந்தியா) அதையே வலியுறுத்துவார்களாம் அதற்கு மற்றையவர்கள் (அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலம்) ஆதரவளிப்பார்களாம் என்று விரிகின்றது இந்தப் படம். மொதத்தத்தில் உப்புச் சப்பற்ற, ஒன்றுக்கும் உதவாத 13ஆவது திருத்தத்தையே இன்னும் வெட்டிக் குறைத்து அதில் சிங்களப் பேரினவாதத்துக்குப் பொருத்தமானவற்றை மட்டும் (13இன் பலம் என்று அரச தலைவர் சொல்வது) நடைமுறைப்படுத்துவார்கள். அதனைத் தமிழர்கள் பார்த்துக்கொண்டு, ஏற்றுக்கொண்டு இருக்கவேண்டும். அதை நோக்கித்தான் பன்னாட்டு அரசியல் சதுரங்க காய்கள் இப்போது நகர்த்தப்படுகின்றன.

இந்தச் சதுரங்க ஆட்டத்தில் இறுதியில் முன்களத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் சாதாரண வீரர்களான தமிழர்கள் மட்டுமே வெட்டி வீழ்த்தப்படுவார்கள், ஏனையவர்களின் நலன்களை அடைவதற்காக. அதற்கான வாள் 13ஆவது திருத்தம்.

## 2022 முற்பகுதியில்...

கீழ் உடனடியாக மாகாண தேர்தலை நடத்துவதற்கான இணக் கம் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் விகிதாசார முறையில் மாகாணத் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாக அவர் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே இருக்கும் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இணக்கம் தெரிவித்திருந்தன.

விகிதாசாரப் பிரதிநித்துவத் தேர்தல் முறையால் ஏற்படும் பாதங்களைக் கருத்தில் கொண்டு தொகுதி வாரிப் பிரதிநித்துவம் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொண்ட கலப்பு தேர்தல் முறையொன்று மைத்திரி - ரணில் கூட்டாட்சி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தத் தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான எல்லை மீள் நிர்ணயம் செய்து முடிக்கப்படாமையால் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

புதிய கலப்பு தேர்தல் முறையின் கீழ் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் அதிக குழப்பம் உள்ளவையாக இருந்த காரணத்தால் மாகாண சபைத் தேர்தல்களை அந்த முறைமையின் கீழ் நடத்தக்கூடாது என்கிற எதிர்ப்புக் கிளம்பியது. மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இப்போது பழைய முறையின் கீழ் அதனை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதை அடுத்து, நாடாளுமன்றத்தில் தேர்தல் சீர்திருத்த தீர்மானத்தை நிறைவேற்றி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அண்மையில் இலங்கைக்கு வந்து திரும்பிய இந்திய அயலுறவுத்துறைச் செயலாளர் ஷ்ரிங்லா, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கான தேர்தல்களையும் நடத்துமாறு வலியுறுத்தியிருந்த நிலையில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

## இனப் படுகொலை...

உரையாடியபோது இந்த எதிர்ப்பை அவர் பதிவு செய்தார் என்று அந்தக் குறிப்புக் கூறியது.

இலங்கையின் கடந்த கால முரண்பாடுகளுடன் இனப்படுகொலையைத் தொடர்புபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற இலங்கையின் எதிர்ப்பும் இதன்போது பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயர் ஆணையர் டேவிட் மக்கினனுடனான இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மற்றும் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற பன்னாட்டுத் தலைவர்களுக்கும் இலங்கைத் தலைவர்களுக்கும் இடையில் நடந்த உரையாடல்கள் குறித்தும் அயலுறவுத்துறை அமைச்சர் விளக்கினார்.

பதிலளிதத்த உயர் ஆணையர், ஒன்றாறியோ மாநில தீர்மானத்தின் சட்ட வலு குறித்து நீதிமன்றத்தின் விசாரணை நடக்கிறது என்றும் அதன் பெறுபேறுகள் குறித்துத் தான் அமைச்சருக்கு அறிவிப்பார் என்றும் தெரிவித்தார்.

## 4 கொலையாளிகளை...

கொலை செய்தனர். கெமி குழு என்று அழைக்கப்படும் வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்களே இந்தக் கொலையை நிகழ்த்தினர்.

குழுவின் தலைவரான கெமியின் தம்பியான புக்கை எனப்படும் அஜித்தனின் தலைமையில் நடந்த இந்தக் கொலை தொடர்பான விசாரணையில் 14 பேர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முக்கிய சந்தேகநபர்களான 6 பேர் சரணடைந்தனர். வழக்கில் தொடர்புபட்டவர்கள் என்கிற சந்தேகத்தில் 8 பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர். எனினும் முக்கிய சந்தேகநபர்களான சந்திரன், சுலக்ஸன், ராஜாகுட்டி, டார்வின் ஆகியோர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு கடந்த ஒரு மாத காலத்தில் மூன்று பொறுப்பதிகாரிகள் மாறிவிட்டபோதும் முக்கிய குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு முடியாமல் திணறி வருகின்றனர் காவல்துறையினர்.

இந்தக் கொலை வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், 14 சந்தேகநபர்களையும் ஒன்றாக அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதற்குப் போதிய ஆட்களை கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் திரட்டுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அடையாள அணிவகுப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

சந்தேகநபர்களின் சார்பாக சட்டத்தரணிகள் என்.சிறீகாந்தா, மு.ரெமீடியஸ், நிசாந்தன், அபிதன் ஆகியோர் மன்றில் முற்பட்டிருந்தனர். சந்தேகநபர்களின் அணிவகுப்பை பகுதி பகுதியாக நடத்துமாறு அவர்கள் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்க மறுத்த நீதிவான் சந்தேகநபர்களின் காவலை 23ஆம் திகதி வரைக்கும் நீடித்தார்.

தலைமறைவாகி உள்ள முக்கிய சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நீதிவான் அங்கு கேள்வி எழுப்பினார். வழக்கு விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரே மேற்கொண்டு வருவதால் அவர்களுக்கே இதுபற்றித் தெரியும் என்று நீதிமன்ற காவல்துறையினர் தெரிவித்தனர். இதையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியை அடுத்த தவணையில் நீதிமன்றில் முற்பட்டு விளக்கமளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## பால் மா...

கிலோ பால் மாவின் விலை 250 முதல் 300 ரூபாவால் அதிகரிக்கும் என்று தெரிகின்றது.

முன்னதாக பால்மா இறக்குமதி யாளர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நுகர்வோர் அதிகார சபையின ருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் ஒரு கிலோ பால் மாவின் விலையை 200 ரூபாவாலும் 400 கிராம் பால் மாவின் விலையை 80 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. ஆனால் விலை அதனைவிடவும் அதிகரிக்கும் என்று தெரிகின்றது.

உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரித்திருப்பது மற்றும் இறக்குமதியின் போதான கப்பல் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்திருப்பது ஆகிய காரணங்களால் ஒரு கிலோ பால் மாவின் விலையை 350 ரூபாவால் அகரிக்கவேண்டும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## பதவி...

அவரது இடத்திற்கு ஜீவன் தியாகராஜா நிமிக்கப்பட்டுள்ளார்.

ஜீவன் தியாகராஜா இதற்கு முன்னர் மனிதாபிமான முகவர் அமைப்புகளின் கூட்டணி என்கிற மனித உரிமைகள் சார் அமைப்பின் தலைவராகவும் பதவி வகித்திருக்கிறார்.

## பதின்ம...

பாடசாலையைவிட்டு இடை விலகியவர்கள் இருந்தால் அவர்கள் தமது பகுதி சுகாதார அதிகாரி பணி மனையில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தந்தை செல்வா முன்வைத்த தீர்வு தமிழீழம்

● நியூட்டன்



பிரித்தானியர்களிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்ற 28 ஆண்டுகளின் பின்னர் தந்தை செல்வா கண்டுபிடித்த தமிழர்களுக்கான தீர்வே தமிழீழம். அப்போது தமிழர்களின் தளபதியாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இருந்தார். அவரிடம் படையணிகளோ, ஆயுதங்களோ இருக்கவில்லை. தமிழீழத்தை அடைவதற்கான அவரது மூலோபாயம் என்ன என்பது முதன்மையான கேள்வியாக இருந்தது. அவர்களின் மனதில் இருந்த நம்பிக்கை என்னவென்றால் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து வங்காளதேசத்தை (கிழக்குப் பாகிஸ்தான்) இந்தியா பிரித்துக் கொடுத்தது போல இலங்கைத் தீவிலிருந்து தமிழீழத்தை அது தமிழருக்குப் பிரித்துத் தரும் என்பதே. இதற்கிடையில் தந்தை செல்வா "இனித் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று இன்னோர் தீர்க்க தரிசனத்தையும் கூறினார்.

இந்திரா காந்தி தமிழீழத்தைப் பெற்றுத் தருவார் என 1976ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நம்பியபோதிலும் 1987இல் இந்திரா காந்தியின் மகனான ரஜீவ் காந்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பினார். அப்போது அமிர்தலிங்கம் உயிருடன் இருந்தார். ஆனால் தளபதியாக அல்ல. 1989இல் நடந்த தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட முடியாத சூழலில் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிட வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டது. அப்போது இந்தியா தனது தளபதியாக வரதராஜப் பெருமாளையே முன்னிறுத்தியது.

**சிங்களவன் கூடாது இந்தியா நல்லது**

சிங்களவர்கள் கெட்டவர்கள், அவர்களுடன் இணைந்து வாழ முடியாது என்ற மனப் பதிவைத் தமிழர் மத்தியில் விதைத்தவர்கள் தமிழ் அரசுக் கட்சியினரே. சிங்களவனின் முதுகுத் தோலை உரித்துச் செருப்புத் தைத்துப்போடுவேன் - என அமிர்தலிங்கத்தின் மனைவியான மங்கையற்கரசி பொது மேடைகளில் பேசி வந்தார் என்று கூறப்படுவதுண்டு. ஆனால் அதனை உறுதிப்படுத்தும் விதத்திலான பத்திரிகைச் செய்திகளோ ஆவணங்களோ எதுவும் இல்லை. இருப்பினும் இந்தக் கதை பழைய தமிழ் அரசுக்காரர்களிடம் பழம் பெருமையாக நிலைபெற்றுள்ளது.

இந்தியா நல்லது என்ற தமிழ் அரசுக் கட்சியின் கண்டுபிடிப்பு 1987 ஒக்ரோபரில் இந்தியப் படைகளின் படுகொலைகள், பாலியல் வன்புணர்வுகளின் பின்னர் எவ்வளவு உண்மையானது என்பது தமிழ் மக்களுக்குப் புரிந்தது. தமிழ் அரசுக் கட்சி தமிழர்களுக்குக் கூறிய சிங்களவன் கதையும், இந்தியா பற்றிய கதையும் மக்கள் மத்தியில் எடுபடாது போன நிலையில் தற்போது தமிழ் அரசுக் கட்சி கூடாது என்ற மனப்பதிவு தமிழர் மத்தியில் உருவாகத் தொடங்கியிருக்கிறது.

2018இல் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் இதை வெளிக்காட்டின (வடக்கில் பூநகரிப் பிரதேச சபையையும், கிழக்கில் வெருகல் பிரதேச சபையையும் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென் றது).

> **விடுதலைப் புலிகளின் முதலாவது கண்ணி வெடித் தாக்குதல் தின்னவேலியில் இடம்பெற்றபோது 13 தரைப் படையினர் கொல்லப்பட்டனர். அது ஓர் அதிஷ்டமில்லாத இலக்கமோ என்னவோ, கெட்ட இலக்கம் என்று பலர் கூறிக்கொண்டாலும் இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வுக்கான அரசமைப்பின் இலக்கம் 13ஆக அமைந்தது என்னவோ உண்மைதான்**

**இந்தியாவின் தீர்வு - 13**

தமிழீழத்தை இந்தியா பெற்றுத் தரும் என்று தமிழ்த் தலைவர்கள் நினைத்த போது இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தம் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான ஓர் அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்டது. 13 ஆம் இலக்கம் எண் கணித சோதிடத் தில் ஓர் அதிஷ்டமற்ற இலக்கமாகக் குறிப்பிடப்படுவதைப்போலவே இந்தப் 13ஆம் திருத்தமும் போய்க் கொண்டிருக்கிறது. தமிழீழத்தை நம்பிய அமிர்தலிங்கம் 1989 ஜீலை 13ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட் டார்.

விடுதலைப் புலிகளின் முதலாவது கண்ணி வெடித் தாக்குதல் தின்னவேலியில் இடம்பெற்றபோது 13 தரைப் படையினர் கொல்லப்பட்டனர். அது ஓர் அதிஷ்டமில்லாத இலக்கமோ என்னவோ, கெட்ட இலக்கம் என்று பலர் கூறிக்கொண்டாலும் இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வுக்கான அரசமைப்பின் இலக்கம் 13ஆக அமைந்தது என்னவோ உண்மைதான்.

இந்த 13 தீர்வு என்பது அறிவிக்கப்பட்டு 34 வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய அயலுறவுச் செயலர் ஹர்ச வர்தன் ஷ்றிங்ளா கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கையில் 13ஐப் பொத்தி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். கூட்டமைப்பினரைச் சந்தித்த பின்னர் அவர் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்தார். சுப்ரமணியம் சுவாமி வழங்கிய கடிதத்தை மகிந்த ராஜபக்சவுக்குக் கையளித்தார். தலதா மாளிகையை வழிபட்டார் (இலங்கையின் புராதன சிவாலயங்களுக்கோ - திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், நல்லூருக்கோ செல்லவில்லை).

**புலிகளின் வானூர்தித் தாக்குதலால் ஏற்பட்ட பயம்**

இறுதிப் போரை அண்மித்த காலத்தில் புலிகளின் சிறிய வானூர்திகள் வன்னியிலிருந்து கொழும்புக்குப் பறந்து அங்கு குண்டுகளை வீசி விட்டு பத்திரமாக வன்னிக்குத் திரும்பியமை இந்தியாவுக்கு அதிக பிரச்சினையை ஏற்படுத்தியது. வன்னியிலிருந்து கொழும்பு நோக்கிப் பறந்த அந்த வானூர்திகளுக்கு இந்தியாவை நோக்கிப் பறப்பது கடினமான காரியமல்ல என்று புரிந்தது. இதனால் தம் மீதும் புலிகள் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சம் இந்தியாவுக்கு இருந்தது.

1991இல் ரஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் ஈழத் தமிழரின் விடயத்தில் இந்திய அரசு கவனம் செலுத்தவில்லை. ஆனால், டெல்லிக்கும் கொழும்புக்குமான உறவு எப்போதும் சிறப்பாகவே இருந்து வருகிறது. இந்த உறவைக் குழப்பும் வல்லமை தமிழ் நாட்டிலுள்ள தமிழருக்கோ இலங்கையிலுள்ள தமிழருக்கோ இருக்கவில்லை. ரஜீவ் காந்தியின் கொலை தமிழ்நாட்டில் நடந்தது இலங்கைத் தமிழர் விடயத்தில் இறுக்கமாக எதையும் கதைக்கும் வாய்ப்பைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு இல்லாது செய்தது.

இறுதிப் போரின்போது புலிகளை அழிப்பதில் இந்தியா தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. அது இலங்கை அரசுக்குச் சார்பானது என்பதைவிட இந்தியா தனது எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அவ்வாறு செய்தது.

போர் முடிவுற்ற பின்னரும் 1987இல் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் தீர்வு என்ற விடயம் பேசப்படுகிறது. இதையே இப்போது இந்திய அயலுறவுச் செயலர் மீண்டும் குறிப்பிட்டுள்ள போதும் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச அவருக்கு ஒரு செய்தியைக் கூறினார். "13ஆம் திருத்தத்திலுள்ள பிழையான விடயங்களைத் தவிர்த்து அதிலுள்ள நல்ல விடயங்களைக் கருத்தில் எடுத்துச் செயற்படுத்துவதே இன்றுள்ள தேவையாகும்" என்பதே அரச தலைவர் கூறிய செய்தி. ஆனால், 13ஆம் திருத்தத்தில் எது நல்ல விடயம், எது கெட்ட விடயம் என இந்திய அயலுறவுச் செயலரும் கேட்கவில்லை. அரச தலைவரும் தெளிவுபடுத்தவில்லை.

1990இல் இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட (1987இல்) மாகாண சபை முறைமையை வடக்குக் கிழக்குத் தவிர்ந்த 7 மாகாணங்களுக்கும் இலங்கை அரசு அறிமுகப்படுத்தியது. 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தேர்தல் நடத்திப் புலிகள் செயற்பாட்டில் இருக்கும்போதே புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய பிள்ளையான் அதன் முதலமைச்சராக்கப்பட்டார். கிழக்கின் இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் 2012இலும் வடக்குக்கான தனியான மாகாண சபைத் தேர்தல் 2013இலும் நடத்தப்பட்டன. புலிகள் அழிக்கப்பட்ட பின்னர்கூட வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்துத் தனியான மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாது தனித்தனியாகத் இலங்கை அரசு தேர்தல்களை நடத்தியது. இந்தியா அதில் தலையிடவில்லை.

இப்போது அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச இலங்கை - சீன உறவு பற்றி இந்தியச் செயலரிடம் தெளிவாக எடுத்துக் கூறினார் என்றும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கை ஒரு போதும் செயற்படப்போவதில்லை என்றும் இந்திய முதலீடுகளை இலங்கையில் அதிகம் மேமற்கொள்ள முடியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆக மொத்தத்தில் அவர்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டது. தமிழர்களின் பிரச்சினை....?

## தந்தை செல்வா...

**கூட்டமைப்பு பொய் சொல்கிறதா?**

யுரியூப் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான குணா கவியழகன் இந்திய அயலுறவுச் செயலரின் அறிக்கை பற்றி வெளியிட்ட கருத்தில், தீர்வு கிடைக்கும் என நடைமுறைச் சாத்தியமற்ற விடயத்தை மக்களை நம்ப வைக்க முயற்சிக்கின்றனர். உண்மையில் 13ஆம் திருத்தம் தமிழருக்கான பாதுகாப்பைத் தரவில்லை. மகாண சபையை அரசு எப்போது வேண்டுமானாலும் கலைக்கலாம். வடக்கையும் கிழக்கையும் இணைக்கலாம்

அல்லது பிரிக்கலாம். 13இல் உள்ளதுபோல காணி அதிகாரமோ, காவல் அதிகாரமோ வழங்கப்படவில்லை. தமிழ் மக்கள் விடயத்தில் எல்லாவற்றையும் மீறும் ஓர் அரசியல் கலாசாரம் சிங்களவரிடம் உண்டு - என்கிறார். இப்போதும் அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அதனைத் தடுத்து களநிலவரத்தைத் தம்வசப்படுத்தும் வல்லமை தமிழ்த் தலைவர்களிடம் இல்லை என்பதே கவலைக்குரிய விடயம்.

**காவல் அதிகாரம்**

1987ஆம் ஆண்டின் பின்னர் வடக்குக் கிழக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிச் சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் தமது மெய்ப்பாது காப்பாளர்களாகத் தமிழ்க் காவலர்களை வைத்திருந்தால்கூட அதற்கொரு நடைமுறைப் பரிமாணம் இருந்திருக்கும். ஆனால் இந்த உறுப்பினர்கள் தமது வாகனத்தில் சிங்க இலட்சினை வைத்திருப்பதையும் சிங்களப் காவலர்களை மெய்ப்பாதுகாவலர்களாக வைத்திருப்பதையும் பெருமையாகக் கருதினார்களே தவிர தமிழருக்கான ஒரு நிர்வாக முறையை நடைமுறையில் அக்கறை செலுத்தவில்லை.

"தமிழ் மக்களை யாராவது உசுப்பேற்றினால் "உம்" என்றும் கடுப்பேற்றினால் "கம்" என்றும் இருந்துவிட்டால் வாழ்க்கை "ஜம்" மென்று இருக்கும் என்று முச்சக்கர வண்டியில் பின்புறத்தில் பொறிக்கப்பட்டிருப்பதாகச் சமூக வலைத்தளங்களில் உலாவும் ஒளிப்பட வாசகத்துக்கு ஏற்ப நடந்துகொண்டால் மட்டுமே தமிழ் மக்கள் தப்பி ஒட்டி வாழ முடியும் என்ற நிலைக்கு வந்துவிட்டது நிலவரம்.

தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தந்தை செல்வா காலத்தில் இருந்தே தமிழ் மக்களை உசுப்பேற்றியே தமிழ்த் தலைவர்கள் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். அது தமக்கு ஒருபோதும் தீர்வைப் பெற்றுத்தராது என்பதை இனியாவது தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

# புலித்தேவன், நடேசன் ஆகியோரை நாமே சுட்டோம்

■ கமலநாதன் ■



போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இலங்கைத் தரைப் படையில் பதவி வகித்த பலரையும் அணுகித் தமது பதிவுகளின் ஊடாக அவர்கள் எவ்வாறு புலிகளை வென்றார்கள், அல்லது கொன்றார்கள் என்றும் அதில் ஒவ்வொரு தரைப்படைச் சிப்பாய்களும் எத்தகைய அர்ப்பணிப்புகளை (அவர்களளவில்) செய்தார்கள் போன்ற விடயங்களையும் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறுவதில் சிங்கள யூரியூப் வலைத்தளங்கள் போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய எல்லா இணையத் தளங்களுமே புலிகளைப் பயங்கரவாதிகள் என்றே அழைக்கின்றன.

இறுதிப் போரில் பங்குகொண்ட படையினரைச் செவ்வி கண்டு அவர்கள் எவ்வாறான துன்பங்களை அனுபவித்தார்கள், அதுபோன்றதொரு சூழல் இனிமேல் ஏற்படாதவாறு எவ்வாறு பாதுகாப்பது, இலங்கையைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சிங்களவருக்கும் உண்டு என்ற சாரப்பட இந்தச் செவ்விகள் அமைகின்றன. நளின் ராஜபக்ச, வெனச, பொத்துகொல்ல, சமன் போ யு எனப் பல யூரியூப் பக்கங்களில் இவ்வாறான செய்திகள் இடம்பெறுகின்றன.

வெனச அலைவரிசையில் செவ்வியளித்துள்ள லூட்டினன்ட் ஜெயரத்னவின் செவ்வி சுருக்கமாக இங்கு தரப்படுகிறது. மர்மங்களாகவுள்ள பல விடயங்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார் அவர். இறுதிப் போரின் இறுதி நாள்களில் முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தைக் கைப்பற்றிய நடவடிக்கை தொடர்பிலும் மக்களை படையினரின் கட்டுப்பாட்டுக்குள் எடுத்தது தொடர்பிலும் தனது முன்னரங்க அனுபவத்தைப் பதிவு செய்திருக்கிறார் அவர்.

2001ஆம் ஆண்டு படையில் சேர்ந்த நான் பயிற்சி முடிந்தபின் மன்னாரில் கடமையைப் பொறுப்பேற்று மாவிலாறுச் சண்டை வரை சென்றிருக்கிறேன். எனது போர் அனுபவத்தில் இறுதிப் போரின் போது வட்டுவாகல் பாலத்தைக் கைப்பற்றியது மிகவும் முக்கியமானது. 2009 மே 14 ஆம் திகதி வட்டுவாகல் பாலத்துக்குக் கிழக்காகக் கடற்கரையில் இருந்து புலிகள் அமைத்திருந்த மண் அணை வரை சென்று அங்கிருந்து படிப்படியாகப் பாலத்தைக் கைப்பற்றினோம்.

> **புலிகள் தமது பதுங்கிடங்களுக்கு அருகில் நாய்களை வைத்திருந்தார்கள். அதனால் எங்களின் சிறிய அசைவைக்கூட நாய்கள் கண்டுபிடித்துக் குரைக்கும். இதுவும் படையினரின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தது**

வட்டுவாகல் பாலத்துக்கு வடக்காகப் பாலத்தைத் துண்டித்து பெரிய கிடங்கொன்றைப் புலிகள் வெட்டியிருந்தார்கள். அந்தப் பக்கத்திலிருந்து எமது நகர்வுகளை இலகுவாகக் கண்காணிக்கும் வாய்ப்புப் புலிகளுக்கு இருந்தது. தமது முன்னரங்க நிலையில் பெரிய மண் அணையை அமைத்து அந்த அணை ஓரங்களில் ஆயிரக்கணக்கில் கண்ணி வெடிகளைப் புதைத்து வத்திருந்தார்கள். 2009மே 14ஆம் திகதி இரவு தொடங்கிய எனது பிரிவினரின் நகர்வில் என்னைவிட வேறு 7 பேர் அடங்கியிருந்தார்கள். கடலுக்கூடாக நடந்து நந்திக் கடலுக்கும் கடலுக்கும் இடையிலான மண் பரப்பை அடைந்தோம். உடனடியாக நிலத்தை (மணல்) தோண்டிப் பனை மரம் மற்றும் மண் சாக்குகளைப் பயன்படுத்தி ஒரு தற்காலிக பதுங்கிடத்தை அமைத்தோம்.

அங்கிருந்து புலிகள் அணியினரின் நடமாட்டத்தை அவதானித்துத் தாக்குதலுக்கான முன்னரங்கச் செய்திகளை நாமே வழங்கினோம். அதனடிப்படையில் கிபிர் தாக்குதல், எறிகணைத் தாக்குதல் என நாம் குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஏனைய படைப் படைப்பிரிவினர் தாக்குதல் செய்து உதவினார்கள். அதேவேளை முன்னரங்கப் பகுதிகளின் வேறு திசைகளில் நின்று தாக்குதலை நடத்திய படையினருக்குப் பெருமளவில் உயிரிழப்புகளும் காயங்களும் ஏற்பட்டன.

15ஆம் திகதி காலை ஆறு மணிக்கு அங்கிருந்து தாக்குதலைத் தொடுத்தோம். கடலில் இருந்து கடற்படையினர் தாக்கி உதவினார்கள். அதேவேளை வேறொரு முனையில் லூட்டினன்ட் வீரசிங்க புலிகளிடம் சிக்கிக்கொண்டார். அவர் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது தொலைத் தொடர்புக் கருவியை வைத்திருந்த உதவியாளரும் காயப்பட்டுத் தண்ணீருக்குள் விழுந்து விட்டார். அவரிடமிருந்தும் தொடர்புகள் கிடைக்கவில்லை. அதேவேளை வட்டுவாகல் பாலத்தின் இருபக்கமும் கிளைமோர் வெடிகளைப் புலிகள் பொருத்தியிருந்தார்கள்.

14ஆம் திகதிய முன்னெடுப்பில் வட்டுவாகல் பிள்ளையார் கோவில் பகுதியை நாங்கள் சென்றடைந்திருந்ததால் பாலம் வரை செல்வதே எமது பணியாக இருந்தது. நாங்கள் அமைத்திருந்த தற்காலிக பதுங்கிடத்தைப் புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள்.

புலிகளின் நிலைகளுக்கும் எமது நிலைகளுக்குமிடையில் 50 மீற்றர் வரை இடைவெளி இருந்த போது நாங்கள் அவர்களை நோக்கிக் கிரினெற் குண்டுகளை வீச அவர்கள் எங்களை நோக்கிக் கிரினெற் குண்டுகளை வீசினார்கள். ஆனால் இருசாராரின் குண்டுகளும் இலக்குக்கு முன்னதாக உள்ள பகுதிகளில் விழுந்து வெடித்தன.

புலிகள் தமது பதுங்கிடங்களுக்கு அருகில் நாய்களை வைத்திருந்தார்கள். அதனால் எங்களின் சிறிய அசைவைக்கூட நாய்கள் கண்டுபிடித்துக் குரைக்கும். இதுவும் படையினரின் முன்னேற்றத்துக் குத் தடையாக இருந்தது.

மறுநாள் அதிகாலையில் ஒருங்கிணைத்துத் தாக்கத் தொடங்கினோம். நாங்கள் துப்பாக்கியால் சுடுவதற்கு முன் 8 பேரும் சத்தமாகக் கத்திக்கொண்டு சுட்டோம். இதனால் எங்களில் பலர் இருப்பதாக நினைத்துப் புலிகளின் முன்னரங்க நிலையிலிருந்தவர்கள் பின்வாங்கினர். உடனடியாக 3 பங்கர்களைக் கைப்பற்றினோம். கைப்பற்றியதும் அங்கு புலிகள் தோண்டியிருந்த கிடங்கை பைக்கோ மூலம் மூடினோம்.

(23ம் பக்கம் பார்க்க)

# சீனப் பட்டுப் பாதைத் திட்டத்தால் இந்து சமுத்திரத்தில் கடல்கோள்...?

▮ மருத்துவர் சி.யமுனாநந்தா ▮

**நில நடுக்கத்தின் போது கடலில் மோதும் புவித் திணிவுகளின் விசை கடலில் கடல்கோள் அலைகள் உருவாவதில் பங்கெடுக்கின்றன.**



சமுத்திரங்களிலுள்ள ஆழமான பகுதியான சமுத்திர ஆழிகளில் கடல்நீர் ஓட்டங்களின் நிலைக்குத்தான கீழ்நோக்கிய தொடர்ச்சியான விசைகளின் கூறுகளால் தளர்வான பகுதிகள் ஏற்படும். இவை இயற்கையாகவே தொடர்ச்சியாக நிகழ்ந்த வண்ணம் இருக்கும். இத்தகைய புள்ளிகளில் இருந்தே நிலநடுக்கம், எரிமலை வெடிப்புக்கள் என்பன பெரும்பாலும் வெளிப்படுகின்றன. புவித் தகட்டில் ஏற்படும் நகர்வுகளும், அதிர்வுகளும் புவி நடுக்கத்துக்கும், எரிமலை ஏற்படுவதற்கும் முக்கிய ஏதுவாக அமைகின்றன. புவித்தட்டுக்களுக்கு இடையிலான நகர்வுகளும், கடல்கோள் உருவாதலும் பற்றி உலகில் வரலாற்றுக் காலம் முதல் குறிப்பிடப்பட்டு வருகிறது. இவற்றால் பல கண்டங்கள் பிரிந்தமையும், அழிந்தமையும், உருவானமையும் புவியியலாளர்களால் விவரிக்கப்பட்டுள்ளன.

### இலங்கையைச் சுற்றி நடுக்கங்கள்



கடந்த நூறு வருடங்களை நோக்கும்போது பெரும்பாலான புவி அதிர்வுகளும், எரிமலை வெடிப்புக்களும், கடல்கோள்களும் இந்தோனேசியாவைச் சூழ்ந்த கடல் பகுதிகளிலும், பசுபிக் சமுத்திரக் கடல் பகுதியிலும், அத்திலாண்டிக் கடல் பகுதியிலும் அதிகம் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் தற்போது நிலநடுக்கப் பதிவுகள் இலங்கையைச் சூழ உள்ள கடல் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உணரப்படுகின்றன. இவை பருமனில் சிறிதாக இருப்பினும் எதிர்காலத்தில் இவற்றின் தீவிரம் எவ்வாறு அமையும் என்று எதிர்வுகூற முடியாது.

சமுத்திரங்களில் நிலநடுக்கத் தளர்வுப் புள்ளிகள் ஏற்படுவதில் சமுத்திர நீரோட்டங்களும் காரணமாக அமைகின்றன. இதைச் சூழலியல் நோக்கில் ஆராயும்போது பூகோள வெப்பமடைதல் அண்மைக் காலத்தில் விரைவுபடுத்தப்பட்டமையால் கடல் நீர்மட்ட உயர்வுடன் சமுத்திர நீரோட்டங்களின் திசையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை சமுத்திர ஆழிகளில் தளர்வான தன்மையை அதிக அளவில் ஏற்படுத்தலாம். குறிப்பாக இந்து சமுத்திரத்தில் புதிய கடல்கோள் மையங்கள் உருவாகுவதற்கு இந்தப் பூகோள வெப்பமடைதல் முதன்மைக் காரணியாக அமையலாம்.

அடுத்துக் கடல்வாழ் சூழலியல் சாகியங்கள் நெகிழிக் கழிவுகளாலும், எண்ணெய்க் கழிவுகளாலும், அணுக்கதிர்க் கழிவுகளாலும் அழிக்கப்படுகின்றன. இதனால் இயற்கைக்கு மாறான ஆழ்கடல் சாகியங்கள் உருவாகின்றன. இவையும் ஆழ்கடலில் நில நடுக்கத் தளர்வும் புள்ளிகள் ஏற்பட ஏதுவாக அமையும்.

### இலங்கையின் செயற்கைத்திட்டுகளால் ஆபத்து

சமுத்திரச் சூழல் தொகுதியையொட்டி அமைக்கப்படும் செயற்கையான தீவுகள், செயற்கையான துறைமுகங்கள் என்பன கடல் நீரோட்டத்தைத் திசை திருப்ப வல்லன. குறிப்பாகச் சீனாவின் தென் கடலில் உருவாக்கப்படும் தீவுகள், இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகம் நிலத்தினுள் செயற்கையாகவும், கொழும்புத் துறைமுக நகர் மனிதர்களால் செயற்கையாக மண்ணிட்டு நிரப்பி அமைக்கப்பட்டுள்ளமையும் கடலில் சமுத்திர நீரோட்டத்தில் நிரந்தர மாற்றங்களை உருவாக்கும். இதனால் சமுத்திரத்தில் உள்ள ஆழிகளில் புதிய புதிய நிலநடுக்கத் தளர்வுப் புள்ளிகள் ஏற்படும்.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தால் இந்து சமுத்திரச் சூழலில் பாதிப்புகள் ஏற்படுவதைத் தற்போது உணரக்கூடியதாக உள்ளது. 2004 ஆம் ஆண்டளவில் இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டத்தைச் சூழலியலாளர் எதிர்த்தமைக்கு வட இலங்கையின் கடல்சார் புவியியலில் மாற்றம் ஏற்படும் என்ப தும் ஒரு காரணம். அவ்வாறே சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தையும் தற்போதைய சூழலையும் நோக்கவேண்டும்.

இதனால் இயற்கையான சமுத்திர நீரோட்டத்தின் திசைக்கு மாற்றம் ஏற்படும். எனவே அண்மைக் காலங்களில் இலங்கையைச் சூழ ஏற்படும் நில அதிர்வுகளும், அவற்றால் கடல்கோள் ஏற்படுவதற்கான எதிர்வுகூறல்களுக்கும் சூழலியலாளர்கள், சமுத்திரவியலாளர்கள், புவியியலாளர்கள், வானியல் அறிஞர்கள், பொறியியலாளர்களின் ஆய்வுகள் எதிர்காலத்தில் இன்றியமையாதவை ஆகின்றன. காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. செயலமர்விலும் கடல்மட்ட அதிகரிப்பு, நீரோட்ட மாற்றம் என்பனவற்றிற்கும் கடல்கோள் ஏற்படுவதற்கு மான தொடர்புகள் பற்றி விழிப்புகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

### சூழலியல் மாதிரி

நில நடுக்கத்தின்போது கடலில் மோதும் புவித் திணிவுகளின் விசை கடலில் கடல்கோள் அலைகள் உருவாவதில் பங்கெடுக்கின்றன. பொதுவாக நில நடுக்கத்தின் பருமன் ரிச்டர் அளவில் குறிப்பிடப்படுகின்றது. இது பொதுவாக 6 இற்கு மேலே செல்கிறபோது கடல்கோள் (சுனாமி) அலைகள் ஏற்படலாம். இது கடலில் உள்ள ஆழிகளின் இளகு புள்ளிகளில் ஏற்படலாம்.

சமுத்திரத்தில் ஆழிகளில் புவிநடுக்கம் ஏற்படக்கூடிய தளர்வான பகுதிகள் ஏற்படுவதற்கு சமுத்திர நீரோட்டங்களில் ஏற்படும் மாற்றம் ஒரு காரணமாகும். இதனைக்



காலநிலை மாற்றம், புவி வெப்பமடையும் மட்டம் உயர்தல், சமுத்திரச் சூழலியல் மாற்றம், நெகிழிச் சாகியம் மாறல், இயற்கைக்கு மாறாகக் கடற்கரையின் பூகோளத்தை மாற்றல் என எல்லாமும் செல்வாக்குச் செலுத்தும்போது பட்டுப்பாதைத் திட்டம் போன்ற மனிதச் செயற்பாடுகளூடாக அதற்கு மேலும் வலுச் சேர்ப்பதை உடன் நிறுத்தவேண்டும். ■

# தீர்ந்தது தாகம்!



## நயினாதீவில் கடல்நீரை நன்னீராக்கி வெற்றிகரமான பயணம்

**உலகிலேயே கடல் நீரிலிருந்து நன்னீராக்கும் செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் தண்ணீர்தான் மிகச் சிறந்தது என்று வல்லுநர்கள் கூறுகின் றார்கள். அதன் அருமை தெரியாத அரசியல் வாதிகள் போத்தல் குடிதண்ணீரும் கையுமாக அலைந்து மக்களுக்கான குடிதண்ணீர்த் திட் டங்களைத் திறந்து வைத்து விட்டு திரும்பிப்போகிற வழியில் ஒரு வீட்டிலிருந்த குழாயில் தண்ணீரைப் பருகிப் பார்த்து படத்துக்குப் போஸ் கொடுத்தார்கள்.**



▪ தாஸ் ▪



யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றி ஆழ் கடலில் சிறிய சிறிய தீவுகள் பல இருக்கின்றன. சிறியதும் பெரியதுமாக இருக்கும் இந்தத் தீவுகளில் பலவற்றிலும் மக்கள் வாழ்கின்றார்கள். வேலணை, ஊர்காவற்றுறை, மண்டைதீவு போன்ற சில தீவுகள் யாழ்ப்பாணப் பெரு நிலப் பரப்புடன் தரைப் பாதைகள் வழியாக இணைக்கப் பட்டிருந்தாலும் நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, அனலைதீவு போன்ற இன்னும் பல தீவுகள் தரைப் பாதைகள் இன்றி படகுப் போக்குவரத்தை நம்பி மட்டுமே இருக்கின்றன. இங்கெல்லாம் எப்படி மக்கள் சென்று குடியேறி வாழ்க்கையைக் கொண்டு





நடத்துகின்றார்கள் என்பது ஆச்சரியத்துக்குரிய கேள்வி. ஏனெனில் அங்கு குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளே மிக மிகக் குறைவு. கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கான கற்கள், மணல், சிமெந்து முதற்கொண்டு அனைத்தையும் படகுகளில் ஏற்றியே எடுத்துச் சென்று சேர்க்கவேண்டும். இதுவொரு பெரும் சுமை.

நான்கு பக்கங்களும் நெருக்கமாகக் கடலால் சூழப்பட்ட சிறு நிலப்பரப்புகளாகிய இந்தத் தீவுகளில் குடிதண்ணீர் கிடைப்பது அருமையிலும் அருமை. யாழ்ப்பாணப் பெரு நிலப் பரப்பிலிருந்து குழாய்கள் வழியான தண்ணீர் விநியோகமும் இது வரையில் சாத்தியமாக இல்லை. சுத்தமான தண்ணீர் ஒரு மனிதனின் அடிப்படை உரிமை என்று ஐ.நா. கூறினாலும் இலங்கை பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து விடுபட்டட கடந்த 70 ஆண்டுகளில் தீவுப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டே வந்தி ருக்கின்றது. அவர்களுக்கு சுத்தமான தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்ததில்லை.

போருக்குப் பின்னரான காலத்தில் தீவுப் பகுதியில் மீள்குடியமர்வு மிக மெதுவாக நடப்பதற்கு அங்கு குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவு வதும் ஒரு முக்கிய காரணம்.

இப்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வந்திருக்கின்றது. இது வரைக்கும் இந்தத் தீவுகளைச் சுற்றி எது தடையாக எழுந்து நின்றதோ அதனையே சாதகமானதாக்கிக்கொண்டு தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாயிற்று. ஆம், கடல் நீரையே நன்னீராக்கி குடிதண்ணீர் உள்ளிட்ட மனிதப் பாவனைக்கு விநியோக்கித் தொடங்கியாகிவிட்டது. இதன் முதல் செயற்றிட்டம் நெடுந்தீவில் முன்னெடுக்கப்பட்டது. அது வெற்றிகரமாக இயங்கத் தொடங்கிய நிலையில் தற்போது நயினாதீவிலும் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாகத் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவால் மெய்நிகர் முறையில் திறந்துவைக்கப்பட்டது. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் இந்த நிகழ்வில் மகிந்தவுடன் பங்கெடுத்துக்கொண்டார்.



அதே நேரத்தில் வழக்கம்போலவே ஆளும் தரப்பு உள்ளூர் அரசியல் வாதிகளும் இரண்டாம் மட்ட கொழும்பு அரசியல்வாதிகளும் நயினாதீவுக்கு வந்து நிகழ்வுகளில் பங்கேற்றார்கள்.

வேடிக்கை என்னவென்றால், மக்களுக்கான குடிதண்ணீரைத் திறந்து வைப்பதற்கு வந்த இந்த அரசியல்வாதிகளின் தேவைக்கென ஒரு தொகை குடிதண்ணீர் போத்தல்களும் கொழும்பிலிருந்து கூடவே எடுத்துவரப்பட்டன. தண்ணீர்ப் போத்தலும் கைகளுமாகத்தான் அவர்கள் அலைந்தார்கள். குடித்து முடித்த நெகிழி (பிளாஸ்ரிக்) போத்தல்களை அங்கேயே குப்பைகளாக வீசி விட்டும் போனார்கள்.

உலகிலேயே கடல் நீரிலிருந்து நன்னீராக்கும் செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் தண்ணீர்தான் மிகச் சிறந்தது என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். அதன் அருமை தெரியாத அரசியல் வாதிகள் போத்தல் குடிதண்ணீரும் கையுமாக அலைந்து மக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டங்களைத் திறந்து வைத்து விட்டு திரும்பிப்போகிற வழியில் ஒரு வீட்டிலிருந்த குழாயில் தண்ணீரைப் பருகிப் பார்த்து படத்துக்குப் போஸ் கொடுத்தார்கள். இந்தக் கொடுமையையெல்லாம் யாரிட்ட போய்ச் சொல்லி அழுகிறது?



நயினாதீவில் அமைக்கப் பட்டுள்ள இந்தக் கடல் நீரை நன் னீராக்கும் செயற்றிட்டம் மூலம் அந்தத் தீவு முழுவதற்கும் மட் டுமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள தீவுகளுக்கும்கடலுக்குக் கீழாகப் பதிய வைக்கப்படும் குழாய்கள் மூலம் நல்ல தண்ணீர் வழங்கப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 187.47 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நயினாதீவு, எழுவைதீவு ஆகியவற்றில் வாழும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்திசெய்ய முடியும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர் திட்டத்தை அரசியல்வாதிகள் இப்போதுதான் திறந்து வைத்தாலும் அது கிட்டத்தட்ட ஒரு வருட காலமாகவே பரீட்சார்த்தமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் தண்ணீர் தாங்கி மூலம் தண்ணீரை விநியோகிப்பதற்கான பணிகள் இன்னும் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளன. அதற்கான பணிகள் விரைவாக நடந்து வருகின்றன.


பொறியியலாளர் ராஜ்குமார்

கடலோரம் வரைக்கும் பதிக்கப் பட்டுள்ள பெரிய குழாய்கள் மூலம் கடலில் இருந்து வடித்தெடுக்கப் படும் தண்ணீரை சுத்திகரிக்கும் பிளாண்டுக்கு எடுத்து வந்து அதனை நன்னீராக்கும் இந்தச் செயற்றிட்டம் பற்றி மூத்த இயந்திர பொறியியலாளர் ராஜ்குமார் செம்மண் பத்திரிகையிடம் விளக்கினார். கடலோரக் நீர்த் தாங்கி, கிணறு, இயந்திர இணைப்புப் பகுதிகள், வடிகட்டிய நீர் சேமிப்புப் பகுதி என ஒவ்வொன்றாகக் காட்டி மிக ஆறுதலாக நல்ல முறையில் விளக்கம் தந்தார்.

கடலோரம் வரைக்கும் போடப்பட்டுள்ள குழாய்களின் ஊடாக கடல்நீர் ஊறி சேமிப்புத் தாங்கிக்கு வரும். அதிலிருந்து மற்றொரு தொகுதி சேமிப்புத் தாங்கிகளுக்கு தண்ணீர் ஏற்றப்படும். பின்னர் அது சுத்திகரிப்புத் தொகுதியிருக்கும் இடத்திற்கு அனுப்பப்படும். பிளான்டில் உள்ள மல்டி மீடியா பில்ட்டருக்கே தண்ணீர் முதலில் வந்து சேரும். அது தண்ணீரில் இருக்கும் மண் துகள்கள் மற்றும் ஏனைய அழுக்குகளை வடிகட்டும். வடிகட்டப்பட்ட தண்ணீர் அங்கிருந்து முதன்மை வடிகட்டித் தொகுதிக்கு அனுப்பப்படும். அங்குதான் தண்ணீர் முற்றிலுமாகச் சுத்திகரிக்கப்படும். இதனை ஹாட்றிக்ஸ் பில்டர் எண்டு சொல்வார்கள். பைவ் மைக்ரோன் சைஸ் ஆன பாட்டிக்கல்ஸ் (மிக மிக மிக சிறிய துணிக்கைகள்) எல்லாம் இதில வடிபடும்.

இந்த வடிகட்டல் முடிந்ததும் தண்ணீர் உயர் அழுத்தத்தில் மெம்பறிகள் இருக்கும் முதன்மை வடிகட்டிக்குள் செலுத்தப்படும். நயினாதீவு பொறித் தொகுதிக்குள் மொத்தம் 12 மெம்பறின் சுத்திகரிப்பான்கள் இருக்கின்றன. இந்த மெம்பறின்களில் இருப்பது மிக மிக மிக சிறிய துளைகள். அதன் வழியாக தண்ணீரைச் செலுத்துவதானால் அதியுயர் அழுத்தம் தேவை. நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமாக அதியுயர் அழுத்தத்தில் தண்ணீரைச் செலுத்துவதன் மூலமாக மெம்பரின் ஊடாகத் தண்ணீர் ஊடு கடத்தப்படும். இந்தக் கட்டத்தில் கடல்நீரிலுள்ள கல்சியம், மக்னீசியம் என்று வேண்டப்படாத பாகங்கள் எல்லாம் தண்ணீரிலிருந்து பிரிக்கப்படும். வெளியேறுவது நல்ல தண்ணீராக இருக்கும். கடல் தண்ணீரில் எவ்வளவு உப்பு இருக்கிறதோ அவ்வளவுக்கு மெம்பறின் ஊடாக அதனைச் செலுத்துவதற்கான அழுத்தமும் கூடுதலாகத் தேவை. அதனால் அதிகளவில் மின்சாரம் இதற்குத் தேவைப்படும்.

நயினாதீவில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரத் தொகுதி மூலம் நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் லீற்றர் நல்ல தண்ணீரை உற்பத்தி செய்ய முடியும். இதில் ஆயிரம் லீற்றர் தண்ணீரைச் சுத்திகரித்து எடுப்பதற்கு 120 ரூபா செலவாகிறது. இயந்திரத் தொகுதியை அமைப்பதற்கான செலவு, அதன் பராமரிப்புச் செலவுகள் எல்லாம் இதில் உள்ளடக்கப்படவில்லை. இங்கே உற்பத்தி செய்யப்படும் தண்ணீர் எஸ்எல்எஸ் தரச் சான்றுக்கு நிகரானது.

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஒரு தாங்கியில் சேகரிக்கப்பட்டு இயந்திரங்கள் மூலம் உயர்ந்த தண்ணீர் தாங்கிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து ஊர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று விளக்கினார் பொறியியலாளர் ராஜ்குமார்.

சுத்திகரிப்புத் தொகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இப்போதைக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய பகுதிகளுக்கு தண்ணீர் தாங்கி வாகனங்கள் (பவுசர்) மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் இந்தத் தண்ணீர் திட்டத்தின் மூலம் நிம்மதியடைந்திருக்கிறார்கள். தங்களின் நீண்டகால குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கின்றது என்று மகிழ்ந்திருக்கிறார்கள்.

கடல் நீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் வரும் கழிவு நீர் கடுமையான உப்புச் செறிவுடையதாக இருக்கும், அதனைக் கடலில் கலக்க விடுவதன் மூலம் எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பு, மீன்பிடித் தொழிலில் பாதிப்பு வரும் என்கிற அச்சம், எதிர்ப்பு எல்லாம் இருந்ததுதான். ஆனால் குடிதண்ணீர் தேவைக்கு முன்னால் அதெல்லாம் இரண்டாம்பட்சமாகிவிட்டது என்கிறார்கள் நயினாதீவு மக்கள்.


மாணிக்கவாசகம்

**"ரெண்டு மூண்டு மாதத்துக்கு முதலே தண்ணி எடுத்தாச்சுது. இப்ப ஒரு சம்பிராதாயத்துக்குத் திறந்து வைச்சிருக்கினம். தண்ணி அருமையான... அந்த மாதிரித் தண்ணி... 10... 15 யுனிற்றுக்கு 200 ரூபா வரைக்கும் வரும். நான் ஓராள்தானே. பாவிக்கிறது குறைவு. பாவிக்கிறதப் பொறுத்துக் காசு வரும். பைப்பில மீற்றர் பூட்டியிருக்கினம்''** என்கிறார் மாணிக்கவாசகம். 65 வயதான அவர் தனியனாகவே வாழ்கிறார். இந்த வயதில் தண்ணீர் அள்ளுவதற்காக முன்னரெல்லாம் 3 கிலோ மீற்றர்கள் சென்றுவருவதென்பது அவருக்கு மலையைக் கெல்லி எலி பிடிக்கும் சுமையைப் போன்றது. இப்போது தண்ணீர் வீட்டுக்குள்ளேயே வருவதால் அவர் நிம்மதியடைந்திருக்கிறார்.


சுபாசினி

**"நாங்க தண்ணி எடுத்து 5, 6 மாசமாயிற்று. முதல் ரெண்டு மாசம் பிறியாத் தந்தவை. இப்ப 50 மீற்றர் ஓடிருக்கெண்டவை. எண்ணூற்றிச் சொச்ச ரூபா வந்தது காசு இப்ப கடைசியா... அதுக்கு முதல் ரெண்டு மாசமும் முன்னூறுவா முன்னூறுவா வந்தது. தண்ணி நல்ல தண்ணி. தண்ணீல ஒரு பிரச்சினையும் இல்ல''** என்கிறார் சுபாசினி வயது 18.


அருளானந்தம் ஜெகதீஸ்வரி

**"தண்ணி பரவாயில்லை, நல்ல தண்ணி. ஆனால், குறைச்சுத்தான் தருவினம். ஐஞ்சரை மணிக்குத் தந்தால் ஒரு மணித்தியாலதத்தில நிப்பாட்டிப்போடுவினம். அதுக்குள்ள எப்பிடியும் 500, 600 லீற்றர் தண்ணி எடுப்பன் நான். குடும்பத்தில ஆக்கள்கூட தண்ணி தேவைதானே... வளவுக்க கிணறு இல்ல. ரொய்லெற்றுக்குத் தண்ணி, குடிக்க, குளிக்க, கழுவத் தண்ணி எண்டு எல்லாத்துக்கும் இந்தத் தண்ணிதான் பாவிக்கிறம். தண்ணியில ஒரு பிரச்சினையும் இல்ல. அந்தப் பவுடர் அதிகமாகப் போடுறதால மணம் (குளோரின்). மற்றும்படி சிலர் சொல்லுகினம்தான் ஒத்துக்கொள்ளுதில்ல தோல் கடிக்குது அப்பிடி இப்பிடியெண்டு. ஆனால், எங்களுக்கு அப்பிடித் தெரியேல்ல''** விளக்கமாகச் சொல்கிறார் 55 வயது குடும்பத் தலைவியான அருளானந்தம் ஜெகதீஸ்வரி.

யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீரும் இனிவரும் காலங்களில் தாளையடியில் அமைக்கப்படும் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்தே விநியோகிக்கப்படும். அதற்காக விநியோகக் குழாய்களைப் பதிக்கும் பணிகள் யாழ். நகரில் வேகமாக நடந்து வருகின்றன. விரைவில் இந்தத் திட்டமும் செயற்படுத்தப்படும். அப்போது நயினாதீவு மக்களைப் போன்றே யாழ்ப்பாண மக்களும் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும். ■

# செத்தல் மிளகாயும் காணாமல் போய்விடுமா?

**உணவிற்கு உறைப்புச் சுவையை வழங்குவதற்காகத் தன்னை மாய்த்துக்கொள்ளும் செத்தல் மிளகாய், உற்பத்தியில் தன்னிறைவை காண முயற்சிப்பின் அது தேசிய ரீதியில் வெளிநாட்டுக்குச் செல்லும் அந்நியச் செலாவணியையும் தடுக்கும்**

● ஸஹிடோ ஸ்வாமி



நாட்டினை தன்னிறைவுக்கு இட்டுச் செல்லும் வகையில் செயற்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தினை பற்றிப் பெருமையாகக் கூறுவோரும் உள்ளனர். அதேவேளை அந்தக் காலப்பகுதியில் அதே கொள்கை காரணமாக பஞ்சம் தோன்றியதாக கூறுவோரும் உளர்.

இந்தப் பின்னணி நிலவுகையில், நடைமுறை அரசின் கொள்கைகளின் வரிகளுக்கிடையில் குறித்த இருவேறுபட்ட பார்வைகள் வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்டு வருகின்றன. இன்றைய அரசும் தன்னிறைவு ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான இலக்கினை கொண்டிருக்கின்ற போதிலும், அதற்கு படிமுறை ரீதியான வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைக்கிடாத பட்சத்தில் இசகுபிசகான பெறுபேறுகளை நோக்கி நாட்டை இட்டுச்செல்ல நேரிடும் என அபாய சங்கு ஊதுவோர் அநேகம்.

கொரோனாவிற்கு பிற்பட்டதான பொருளாதார நிலைகளை கட்டுப்படுத்தும் நோக்கில், இறக்குமதி தடைகள் மற்றும் இறுக்கங்கள் நடைமுறையில் இருப்பது உண்மையே. உணவுப் பொருட்களின் உள்ளீடாக பயன்படுத்தப்படும் பொருட்களின் சந்தைத் தேவையைவிட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவு பற்றாக்குறையாக இருப்பதனாலேயே இறக்குமதி செய்யப்பட நேரிடுகின்றது. அத்தகைய இறக்குமதிகளை நிறுத்தும் எண்ணம் இருப்பின் சொந்த நாட்டில் குறித்த உற்பத்தியின் அளவை வினைத்திறனான வகையில் அதிகரிப்பதற்கு திட்டங்களை அடியிட்டு விட்டே இறக்குமதியில் இறுக்கங்களை புகுத்தவேண்டும். அவ்வாறு இல்லையேல் என்ன நிகழும் என்பதை, மஞ்சளுக்கு நடக்கும் அமங்கலத்தினை வைத்து ஊகித்துக் கொள்ள முடியும்.

**உறைப்பிற்கு பங்கம்!**

கறிக்கு-சொதிக்கு-மஞ்சள் போட்டாலும் அது சட்டவிரோதமாகி விடுமோ என்கிற பயத்தினை அன்றாட ஊடகசெய்திகள் கிளப்பி விட்டுள்ள நிலையில், கறிக்கு சேர்க்கப்படும் உறைப்பிற்கு பங்கம் நேருமோ என சிந்திக்க வைக்கும் மற்றொரு அறிவிப்பு அண்மையில் வெளியாகியிருக்கின்றது. ஆமாம், செத்தல் மிளகாயை நாட்டுக்குள் இறக்குமதி செய்வது 2024ஆம் ஆண்டளவில் முற்றாக நிறுத்தப்பட இருப்பதாக அறிவிப்பு ஒன்று வெளியாகியிருக்கின்றது. விவசாய அமைச்சிலிருந்து புறப்பட்டு வந்திருக்கும் அந்த செய்தி, மலையகத்தின் நாவலப்பிட்டி பிரதேசத்தில் செய்யப்பட்டுள்ள மிளகாய் பயிர்ச்செய்கை தொடர்பான முன்னெடுப்புகளைத் தொடர்ந்தே ஊடகங்களில் இடம்பிடித்திருக்கின்றது.

**மிளகாயின் மகிமை!**

உணவிற்கு இந்த உறைப்பு சுவையை பெற்றுக்கொடுக்கும் அரிய பணியை மிளகு கடுகினை காட்டிலும் மிளகாயே செய்து வருகின்றது. பச்சை மிளகாய்க்கு இருக்கக்கூடிய சில பின்னடைவுகளை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் இந்த காய்ந்த மிளகாய்-அல்லது செத்தல் மிளகாய்-காரமான ஆகாரங்களில் தன்னுடைய தனித்துவத்தை காண்பித்தே வந்திருக்கின்றது. குழம்பு அல்லது ஆணம் என்றழைக்கப்படும் கறியை தோன்றா நிலை தூளாக மறைந்து நின்று சிறப்பிக்கும் மிளகாய், ஏனைய வாசனைத் திரவியங்களுடன் சேர்ந்து இடித்தல் அரைத்தல் போன்ற துன்பங்களையும் சந்திக்கின்றது.

கண்ணை வியர்க்க வைக்கவும் நாவைச் சூடாக்கவும்வல்ல மிளகாயில் மருத்துவ குணங்களும் மறைந்தே இருக்கின்றன. மிளகாய் வகையை சேர்ந்த ஏனைய கறிமிளகாய் குடைமிளகாய் என்பன மரக்கறி என்னும் மதிப்பைப் பெற்று கறி நிலைக்கு சென்றாலும், மிளகாய் ஒரு பொழுதிலும் மரக்கறியாகத் தன்னை காட்டிக் கொள்வதில்லை.

**உள்நாட்டு உற்பத்தி போதாது!**

சிவப்பு பையினுள் சில்லறை காசுகள் என்கிற விடுகதைக்கு விடையாக அமையும் உலர்ந்த மிளகாயின் உள்நாட்டுத் தேவையை சமாளிப்பதற்கான தகைமை உள்நாட்டு உற்பத்திக்கு கிடையாது. மொத்த சிவப்பு மிளகாய் தேவையில் 15 வீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக விக்டர் ஐவன் தனது பத்தி ஒன்றில் குறிப்பிடுகிறார். காய்ந்த மிளகாய் இறக்குமதிக்காக வருடமொன்றுக்கு 10,542 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக குறிப்பிடும் அவர், ஒரு ஏக்கரில் நெல்லை பயிரிட்டு பெறும் வருவாயிலும் பார்க்க பத்து மடங்கு வருவாயினை மிளகாய் பயிரிடுவதன் மூலம் பெறலாம் எனக் கூறுகின்றார்.

உணவிற்கு உறைப்புச் சுவையை வழங்குவதற்காகத் தன்னை மாய்த்துக்கொள்ளும் செத்தல் மிளகாய், உற்பத்தியில் தன்னிறைவை காண முயற்சிப்பின் அது தேசிய ரீதியில் வெளிநாட்டுக்குச் செல்லும் அந்நியச் செலாவணியையும் தடுக்கும். உள்நாட்டு விவசாயிகளையும் ஊக்குவிக்கும். இதற்கான-உள்நாட்டில்-மிளகாய் உற்பத்தி-செத்தல் மிளகாய் உற்பத்திக்கான-உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிடுகின்றது. இந்த நடவடிக்கையில் இளையோரை பங்கெடுக்கச் செய்யவும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவிக்கின்றார்.

**ஊக்குவிப்பு தேவை!**

மிளகாய் செய்கையுடன் தொடர்பான ஊக்குவிப்பு முயற்சிகளை வடக்கு கிழக்கிலும் நடைமுறைக்கிட சம்பந்தப்பட்ட தரப்புகள் ஆர்வம் காட்டவேண்டும். குறிப்பாக மிளகாய் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய மானியங்கள், ஊக்குவிப்புக்கள், அறுவடையின் பின்னான பராமரிப்பு மற்றும் பதப்படுத்தல் என்பவற்றுக்கு தொழிநுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனைகளை நமது விவசாயிகளுக்கும் பெற்றுக்கொடுப்பது அவசியமானது. பணப்பயிர்களில் ஒன்றெனக் கருதப்படக்கூடிய மிளகாய் பயிர்ச்செய்கையில் ஏற்கெனவே யாழ். மாவட்ட விவசாயிகள் ஈடுபட்டு வந்தாலும் யாழ். முதன்மை சந்தைகளில் உள்ள தரகர் முறைமை காரணமாக சுரண்டலுக்கு உள்ளாவதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதே.

மிளகாய் உற்பத்தியில் தன்னிறைவை காண்பதற்கான முயற்சிகளில் இதனைக் கருத்தில் கொள்வதும் அவசியமானதே. தவிரவும் தகுந்த விலையில் மிளகாய்-செத்தல் மிளகாய்- கொள்வனவைச் செய்வதும் அரசுப் பக்கத்தினால் செய்யப்படவேண்டிய ஊக்குவிப்பாகும்.

அறுசுவைகளில் ஒன்றெனப் பட்டியற்படுத்தப்படும்

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

# மசாய் மறா காட்டில் புலி வேட்டையோடு கூடிய

## பயண அனுபவம்

02



■ எம். லோகி ■
(காட்டுயிர் ஒளிப்படக் கலைஞன்)

சூரிய உதயத்தின்போதான காட்டின் அழகைக் காணவேண்டியே அதிகாலையிலேயே மசாய் மறா காடு நோக்கிப் புறப்பட்டேன். கென்யா நேரப்படி காலை 6.30 இருக்கும். கதிரவன் மெல்ல மெல்லத் தனது பொன் நிறக் கதிர்களை வானவெளியில் பரவவிட்டான். ஆகா! என்ன அழகு. அந்தக் கதிர்கள் அந்த அதிகாலையில் என் உடலில் ஊடுருவும்போது ஒருவித புத்துணர்ச்சி ஏற்பட்டது. என்னுள் புது உத்வேகம் பிறந்தது. மெய் மறந்து நின்றேன். அப்போது சடுதியாக எங்களுக்கு வந்த தொலைத் தொடர்பு



**அன்றைய புலி வேட்டையைப் பார்ப்பதற்கு எம்மைப் போலவே 13 வண்டிகள் தொடர்ந்தன. காலை 7 மணியளவில் மிருகங்களைத் தேடி அந்தக் காட்டுக்குள் புலனாயத் தொடங்கின அந்தப் புலிகள்**

சாதனத்தின் அழைப்பு மணி என்னை நினைவுக்குக் கொண்டு வந்தது. அப்போது நேரம் 6.40.

புலிகள் வேட்டைக்கு ஆயத்தமாகி விட்டன என்பதே அந்தத்தொலைத் தொடர்பு சாதனத்தின் மூலம் எங்களுக்குக் கிடைத்த செய்தி. சிறுத்தைப் புலி இனத்தைச் சேர்ந்த 5 சகோதாரப் புலிகளில் 4 புலிகள் தமது அன்றைய வேட் டைக்குத் தயாராகி உள்ளன என்ற அழைப்பே அது. அழைப்புக் கிடைத்ததும் காற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்தது எங்கள் வண்டி. வண்டியை முந்திக் கொண்டு என் எண்ணங்கள் அந்த இடத்துக்குச் சென்றன.

எப்படியெல்லாம் வித விதமாக ஒளிப்படங்கள் எடுக்க வேண்டும் என்று கற்பனையில் சிந்தித்துக் கொண்டே போனேன்.

நேரம் காலை 7 ஐத் தொட்டுக் கொண்டிருந்தது.

புலிகள் ஒரு நாள் உணவு உண்டால் அடுத்த நாள் எது வும் உண்ணமாட்டாதாம். தற்போது இரை வேட்டைக்குப் புறப்பட்டுள்ள இந்தச் சகோதரப் புலிகள் இரண்டு நாள்களின் முன்புதான் தமது உணவை எடுத்துக்கொண்டன - வேட்டை யாடின என்று சாரதி பென்சன் கூறினார். எனவே இன்று வேட்டை உறுதி என்பதை நான் தீர்மானித்துக்கொண்டேன் (கிட்டத்தட்ட 72 மணித்தியாலயங்கள்தான் இவைகளால் உணவு உண்ணாமல் இருக்க முடியும்).

அன்றைய புலி வேட்டையைப் பார்ப்பதற்கு எம்மைப் போலவே 13 வண்டிகள் தொடர்ந்தன. காலை 7 மணியளவில் மிருகங்களைத் தேடி அந்தக் காட்டுக்குள் புலனாயத் தொடங்கின அந்தப் புலிகள். உயரமான மண் மேடுகளில் ஏறி நின்று நாற்திசையும் நோட்டம் விட்டன. 20 இலிருந்து 30 நிமிடங்கள் வரை நடந்து, பின் 15 நிமிடங்கள் உயரமான இடங்களில் ஓய் வெடுக்கும். நானும் சலிக்காது 50 மீற்றர் இடைவெளி யைப் பேணியவாறு அந்தப் புலிகளைப் பின் தொடர் ந்து கொண்டே இருந்தேன்.

இதில் இன்னுமொரு சுவாரசியமானதும் விசித்தி ரமானதுமான சம்பவம் நடந்தது. நடக்கும்போது புலி கள் தங்கள் எல்லையை



# மிதிலா

நா.சத்தியபாலன்



## 11

அந்த வீடு முழுதும் குதூகலப் பரபரப்பில் மூழ்கியிருந்தது. அம்மாவும் கோமதி அக்காவும் எனக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். அம்மா இன்று அதிகாலையே எழுந்து முழுகிவிட்டு அருகிலுள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டுத் திரும்பியிருந்தாள். அவளது நெற்றியிலிருந்த திருநீறு வியர் வையில் கரைந்து கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது. அம்மாவின் மனப் படபடப்பு அவள் முகத்தில் தெளிவாய்த் தெரிந்தது. அம்மாவைப் பரிவோடு பார்த்தார் கோமதி அக்கா. அந்த அன்புத் தாயின் மனது அவளது முகத்தில் தெரிந்தது.

மகப்பேற்று மருத்துவரின் ஆலோசனைப்படி என்னை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அனுமதிப்பதற்கான காரியங்களிலே அனைவரும் ஈடுபட்டிருந்தனர். என்னைக் கொண்டு போவதற்காகக் கார் ஒன்றை ஒழுங்கு செய்யும் பொருட்டு மகேஷ் வெளியே சென்றுவிட்டார். மருத்துவமனைக்கு நான் எடுத்துச் செல்லவேண்டிய பொருள்களை ஒழுங்காக மடித்துப் பயணப் பை ஒன்றுக்குள் அடுக்கிக் கொண்டிருந்தார் பி.எம் அங்கிள். அவரது முகத்தில் சந்தோசம் நிறைந்திருந்தது. சிரித்த முகத்தோடும் பரபரப்போடும் எனக்கான ஏனைய உதவிகளைச் செய்துகொண்டிருந்தார் கோமதி அக்கா.

வாசலில் வாகனம் ஒன்று நிறுத்தப்படும் ஓசை கேட்டது. தனது வாகனத்தோடு உள்ளே நுழைந்த மகேஷ், "சரியா? எல்லாம் ரெடியா?" என்றபடி என்னை நோக்கி வந்தார். பரிவோடு என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி "காரிலை போய் ஏறுவோமா மிதிலா?" என்று கேட்டவரின் மகிழ்ச்சி நிறைந்த முகத்தைப் பார்க்க எனக்குள் ஏதோ பெருகி நிறைவதுபோல் உணர்ந்தேன். என்னைப் பக்குவமாய்த் தாங்கிப் பிடித்தபடி காரில் ஏற உதவினார் அம்மா. சாரதியின் அருகில் ஏறி அமர்ந்து கொண்டார் மகேஷ். தெரு வாசலில் நின்றபடி கையசைத்து விடை தந்தனர் பி.எம். அங்கிளும் கோமதி அக்காவும்.

அந்தத் தனியார் மருத்துவமனை அமைதியாய் இருந்தது. மருத்துவமனையில் பணியாற்றும் உதவியாளர்கள் இருவர் சக்கர நாற்காலி ஒன்றை எடுத்துவந்து அதில் என்னை அமர வைத்து மெதுவாக உள்ளே கொண்டு சென்றனர். மகேஷ் அம்மாவுடன் என் பின்னால் வந்துகொண்டிருந்தார். செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டு கர்ப்பவதிகளுக்கான அறை ஒன்றில் என்னை அனுமதித்தனர்.

சிறிது நேரத்தின் பின் அங்கே வந்த பெண் மருத்துவர் ஒருவர் தேவையான விவரங்களைக் கேட்டறிந்துகொண்டு என்னைப் பரிசோதித்தார். "எல்லாம் நோர்மலாக இருக்கு... எப்படியும் இண்டைக்கு இரவுக்குள்ள டெலிவெறி ஆயிடும்" என்று மகேஷிடம் கூறினார்.

"அம்மாளாச்சி...!" எனக் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே அம்மா ஒரு கணம் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தித்துக் கொண்டார்.

மருத்துவமனைக் கட்டிலில் ஆறுதலாகச் சாய்ந்து கொண்ட நான் மகேஷைப் புன்னகையோடு பார்த்துக் கொண்டேன். தானும் பதிலுக்குப் புன்னகைத்தபடி அருகில் வந்து என் தலையைத் தடவி விட்டார் மகேஷ். "நாளைக்கு உங்கட கையில நீங்கள் எதிர்பார்க்கிற குட்டி மகேஷ் வந்துடுவான்" என்றேன். என் அருகில் வந்த அம்மா மனது பொங்க என் நெற்றியில் முத்தமிட்டாள்.

(தொடரும்)

---

### மசாய்

அடையாளப்படுத்திக் கொண்டன. 7 இடங்களில் ஒவ்வொரு முறையும் 4 புலிகளும் சேர்ந்து ஒவ்வொரு மரத்தையும் சுற்றிச் சிறுநீர் கழித்தன. தங்கள் எல்லையை நுகர்ந்து பார்த்துப் பிரித்தறி வதற்கு எல்லை போட்டன. மிருகங்களுக்குள் உள்ள அறிவின் விந்தையைப் பார்த்து வியந்து நின்றேன்.

நேரம் காலை 11 மணி.

அந்தப் புலிகளை இப்போது 35 வண்டிகள் வரை எங்களைப்போலவே வலம் வந்தன. காட்டைச் சூரி யன் தனது வெப்பக்கரங்களால் விசிறிக்கொடுத்தான். சூடு அதிகரிக்கத் தொடங்கியது. 12மணி, 1 மணி என நேரம் கடந்து கொண்டிருந்தது. புலிகள் களைத்து விட்டன. நானும்தான். புலிகள் நித்திரை கொள்ளத் தொடங்கின. என் சாரதியின் காவலில் நானும் ஒரு சிறு தூக்கம் போட்டேன்.

(தொடரும்)

# எடிசன்

**இந்தத் திரைப்படம் அரச கட்டமைப்புகளில் ஒன்றான காவல் துறையினரின் மோசமான செயல்களையும், அவர்களைத் தமக்கு ஏற்றால்போல இயக்குகின்ற அரச இயந்திரத்தினதும், அரசியல் வாதிகளினதும் தன்மையையும் சுட்டிக்காட்டுகிறது**




"எவ்.ஆர்.ஏ.ரி" என்கிற ஆங்கிலச் சுருக்கப் பெயரைக் கொண்ட காவல்துறை அமைப்பொன்று அமெரிக்க நகர் ஒன்றில் செயற்படுகிறது. சட்டத்தைத் தம் கையிலெடுத்து மனித உரிமை மீறல்களையும், மனித குலத்துக்கு எதிரான குற்றங் களையும் நிகழ்த்தும் வழமையான காவல்துறையினரின் பண்புகளே அந்தக் காவல் அமைப்பினது பண்புகளாகவும் இருக்கின்றன. அதன் பின்புலத்தில் வழமைபோலவே அரசியல்வாதி களினதும், ஆட்சியாளர்க ளினதும் கை இருக்கிறது. அவர்களின் ஊக்கத்திலும், அவர்கள் வழங்கும் கட்டற்ற சுதந்திரத்தாலும் எல்லை மீறிச் செயற்படுகின்றனர் காவல்துறையினர்.




அவர்களுக்கு மத்தியில் இதற்கு விதிவிலக்கான ஒரு சில அதிகாரிகளும் இருக்கின்றனர். ஆனாலும் பெரும்பாலான அதிகாரிகள், அரசியல்வாதிகள் அப்படிப்பட்டவர்களாக இல்லை. குற்றச் செயல்களில் ஈடுபட்ட சாதாரண மனிதர்களிடமிருந்து களவுகள், கொள்ளைகள், கொலைகள் எனப் பல குற்றங்களையும் காவல்துறையினரே நிகழ்த்துகின்றனர். பின்னர் வழக்குகளைத் தமக்கு ஏற்றாற்போல் சோடிக்கின்றனர். இத்தகைய நிலையில் ஒரு வழக்கில் இளம் பத்திரிகையாளர் ஒருவர்









காவல்துறையினரின் உண்மை முகத்தை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபடுகிறார். அவருக்கு உதவியாகச் சில மூத்த பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், அவரால் காவல்துறையினரையும், அவர்களின் பின்னணியில் உள்ள பெரும் புள்ளிகளையும் தாண்டி அந்த உண்மையை வெளிக்கொணர முடிந்ததா, இல்லையா என்பதே இந்த ஆங்கிலத் திரைப்படத்தின் முடிவு.

டேவிட் ஜே. பர்க் என்பவரின் இயக்கத்தில் 2005ஆம் ஆண்டில் வெளியாகிய இந்தத் திரைப்படம் பெருமளவில் பேசப்படாத ஒன்றாக இருந்தாலும், அரச கட்டமைப்புகளில் ஒன்றான காவல் துறையினரின் மோசமான செயல்களையும், அவர்களைத் தமக்கு ஏற்றால்போல இயக்குகின்ற அரச இயந்திரத்தினதும், அரசியல் வாதிகளினதும் தன்மையையும் சுட்டிக்காட்டுகிறது. அத்தோடு இத்தகைய கொடூரர்களுக்கு மத்தியில் தமது உயிரைப் பணயம் வைத்து உண்மையை வெளிக்கொணர்வதற்குப் படாதபாடுகின்ற பத்திரிகையாளர்கள் பற்றியும், அதனால் அவர்கள் முகங்கொடுக்கின்ற துன்ப துயரங்கள் பற்றியும், அதையும் தாண்டி அவர்களால் நிகழ்த்தப்படுகின்ற மாற்றங்கள் பற்றியும் அரச கட்டமைப்பும், அதன் இயங்கு நிலையும் அதனால் அவ்வப்போது நிமிர்த் தப்படுவதும் எனப் பல செய்திகளைக் கடத்துகிறது திரைக்கதை.

விறு விறுப்பு வகைப் படம் என்றாலும் திரைக்கதையில் அவ் வளவு வேகம் இருக்கவில்லை. ஆனாலும் இசையமைப்பு, ஒலித் தொகுப்பு எனச் சில அம்சங்களால் படத்தைச் சலிப்பில்லாமல் பார்க்க முடியும். அத்தோடு மோர்கன் ஃப்ரீமேன், எல்.எல். கூல். ஜே, ஜஸ்டின் டிம்பர்லேக், கெவின் ஸ்பேசி எனப் பிரபல நடிகர்கள் இருப்பதும் படத்தைக் கவனிக்க வைக்கிறது.

இளம் பத்திரிகையாளரான பொல்லாக் (ஜஸ்டின் டிம்பர்லேக்) முதன்மைப் பாத்திரமாகப்

# பருமனானவர்களை அதிகம் தாக்கும் கொரோனா

■ சசிகரன் ■



தடுப்பூசியின் முதல் டோஸைப் போட்ட பின்னர் எனக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. உடனடியாகவே கொழும்பிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றுவிட்டேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 20 நாள்கள் வரை மிக மோசமான வேதனையை அனுபவித்தேன்.

மருத்துவமனையில் கொவிட் தொற்றாளர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி அனைத்து நோயாளிகளையும் நல்ல முறையில் கவனித்தார்கள். உரிய நேரத்தில் மருந்துகளைத் தந்தார்கள். அதனால் 20 நாளில் முழுமையாகக் குணமடைந்து விட்டுக்கு வரமுடிந்தது. மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற காலத்தில் அவதானித்த ஒரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

உடல் பெருத்த - பருமனான உடலுள்ளவர்கள் கொவிட் தொற்றாளர்களாக மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டால், வந்த ஓரிரு நாள்களில் அவர்கள் இறந்து போனதைக் கண்டேன். அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். சிகிச்சையை முடித்துக்கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியேறிய போது அதற்கான காரணத்தை மருத்துவர்களிடம் கேட்டேன். அவர்கள் கூறிய பதில் ஆச்சரியமாக இருந்தது.



"அவர்களுக்கும் உங்களைப் போலதான் தொற்று நிலை இருந்தது. நாங்கள் சிகிச்சை விடயத்தில் உங்களைப் பராமரித்தது போலவே அவர்களையும் பராமரித்தோம். எனினும் அவர்களின் உடல் பருமனாக இருந்ததால் அவர்களின் உடலில் ஒட்சிசனின் அளவு குறைவடையும்போது செயற்கையாக நாம் வழங்கும் ஒட்சிசன் அவர்களின் உடலுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. இதனால் அவர்களுக்கு வழங்க வேண்டிய ஒட்சிசனின் அளவு படிப்படியாக அதிகரிக்கிறது. அவர்கள் குணமடையும் வாய்ப்பு இல்லாது போய்விடுகிறது" என்றனர்.

இதைவிடப் பருமனான உடலுள்ளவர்கள் மற்றையவர்களை விட வேறு பல நோய்களால் ஏற்கனவே பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் அதனாலும், அவ்வாறில்லாமலிருந்து கொவிட் தொற்று மாத்திரம்தான் அவர்களுக்கு ஏற்படுகிறது என்றாலும் அத்தகைய பருமனானவர்களால் அதை எதிர்க்க முடியாதிருக்கிறது (நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருக்கிறது) என்றும் கூறினார்கள். எனவே பருத்த உடலுள்ளவர்கள் முடிந்தளவு கொரோனாத்தொற்று ஏற்படாதவாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே சிறந்தது. எனது அனுபவத்திலிருந்தே இதைக் கண்டறிந்தேன். பருத்த உடலுள்ளவர்கள் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதுடன், தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைக் கவனத்துடன் பின்பற்றுவது மிக மிக அவசியமானதும்கூட.

---

## எடிசன்...

படத்தின் பெரும்பகுதியை நிரப்பினாலும், அவருக்கு ஊக்கமளிக்கும், உதவும், பாதுகாப்பளிக்கும் ஆஷ் போர்ட் (மோர்கன் ஃப்ரீமேன்), வழக்கறிஞர் வாலஸ் (கெவின் ஸ்பேசி) ஆகியோரும் படம் நெடுக வருகிறார்கள். முக்கியம் பெற்ற பாத்திரம் இதுதான் என்று கூற முடியாத அளவுக்குப் பாத்திர வார்ப்பு களில் சம நிலை தெரிகிறது. ஆனால், கறுப்பினக் காவல் துறை அதிகாரியாக மனச் சாட்சிக்கு எதிராகச் செயற்ப டும் போதும், காதலையும் குடும்ப வாழ்க்கையையும் நேசிக்கும் ஒருவராகவும், உண்மையை வெளிப்படுத்தும் முனைப்பில் பத்திரிகையா ளர்களுக்கு உதவும் இடத்தி லும் தனது நடிப்பால் கவ னிக்க வைக்கிறார் எல்.எல். கூல். ஜே.

பத்திரிகையாளர்களால் அரசியலிலும் அரசிலும் மாற்றங்களையும், புரட்சியையும் நிகழ்த்த முடியும் என்கிற தொனிப்பில் உருவாகி வரவேற்பைப் பெற்ற பல படங்களுள் ஒரு துகள் எடிசன்.

## சமந்தாவின் உருக்கம்!



திரையுலகத் தம்பதியினரிடம் பிரிவு ஒன்றும் புதினமல்ல. தெலுங்குத் திரையுலகின் பிரபல நடிகர் நாகார்ஜுனாவின் மகனாக சைதன்யாவும் அவரது மனைவியான நடிகை சமந்தாவும் குடும்ப வாழ்க்கையில் பிரிந்து செல்வது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். கடந்த சில மாதங்களாகவே ஊடகங்களில் கடுமையாக அலசப்பட்டுவந்த இந்த விடயம், கடந்த வாரம் இருவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டு அவர்களது ரசிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.


தம்பதியராகத் தாம் இனி வாழப்போவதில்லை என்றாலும் நல்ல நண்பர்களாக இருப்போம் என்று அவர்கள் அறிவித்தார்கள். நாகசைதன்யாவின் அப்பா நாகார்ஜுனா மற்றும் அம்மா அமலா ஆகியோரும் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர்களே. அவர்களின் மண வாழ்க்கை பிரச்சினைகள் இன்றி நீண்ட காலமாக சிறப்பாகத் தொடர்கின்றது. எனினும் பிள்ளையின் வாழ்க்கை அதுபோல அமையவில்லை.

நாக சைதன்யா - சமந்தாவின் திருமண நாள் ஐப்பசி 8ஆம் நாள். இந்த ஆண்டு அவர்களின் நான்காவது திருமண நாள். அதற்கு ஒரு வாரம் முன்னதாக அவர்களின் விவாகரத்து தொடர்பான அறிவிப்பு வெளியானது. அதைத் தொடர்ந்து தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் காதல் பித்துப் பிடித்த உருக்கமான வரிகளைப் பதிவிட்டுள்ளார் சமந்தா. அத்தோடு வெண்ணிற ஆடையில் அவர் இருக்கும் படத்தையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

விஜய் சேதுபதி, நயன்தாரா நடிக்க விக்னேஷ் சிவன் இயக்கும் காத்துவாக்கில ரெண்டு காதல் படத்தில் அடுத்ததாக நடிக்க இருக்கிறார் சமந்தா.

**பொன்.குலேந்திரன்**

# வைரவர் கோவிலடிக் கிணறு



யாழ்ப்பாணத்தில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் முக்கியமான நாற்சந்தி அரசடிச் சந்தி. ஒரு காலத்தில் அங்கு ஒரு செழித்து வளர்ந்த அரச மரம் இருந்தது ஆனால் அதன் கீழ் புத்தர் இருந்ததில்லை. அதற்குப் பதிலாக வம்பளக்க மரத்தின் அடியைச் சுற்றி சலவைக் கற்கள் இருந்தன. இப்போது அந்த மரம் அங்கு இல்லை. அந்த இடத்தில் பாரதி யார் குடிபுகுந்து விட்டார். ஆனால் அந்த சந்தியில் இருந்து கந்தர்மடத்தடி சந்திக்கு போகும் வீதியின் பெயர் இன்றும் அரசடி வீதி என்றே இருக்கிறது. அந்த அரச மரத்தின் வரலாறு பற்றி நாங்கள் ஆராய முன் அந்த சந்திக்கு அருகே உள்ள தேநீர் கடையின் சொந்தக்காரர் சங்கரப்பிள்ளையார் பற்றி ஒரு சில வார்த்தைகள்.

சங்கரப்பிள்ளை நயினாதீவைச் சேர்ந்தவர் தான் உயர் சாதி என்கிற பெருமை அவரிடமிருந்தது. அதனால் அவர் உயர் சாதியினர் என்று கருதப்பட்டவர்களை மட்டுமே தன் கடைக்குள் வந்து இருந்து உண்ண அனுமதித்தார். அவரால் குறைத்து மதிப்பிடப்பட்டு ஒதுக்கப்பட்ட மக்களும் அந்தப் பகுதில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வேலை செய்த களைப்பில் வந்து சுருட்டு, சிகரெட், பீடி, பற்ற அவரிடம் தீ பெட்டி கேட்டால் சங்கரர் தன் கையால் எடுத்துக் கொடுக்கமாட்டார். காரணம் அவரின் விரல்கள் தீ பெட்டி கேட்டவர் கையில் பட்டு அசுத்தமாகி விடும் என்ற எண்ணம்தான்.

ஆகவே கடைக்கு வெளியில் ஒரு கயிறு தொங்கும். அதன் ஒரு முனையில் நெருப்பு இருக்கும், அந்த நெருப்பில் பீடி, சுருட்டை இரண்டு யானை மார்க்க லேபல் போட்ட தீ பெட்டி கிடைக்காதவர்கள் பற்ற வைத்துச் செல்லுவார்கள். அவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுக்கும்போது மூக்குப் போனியில் சங்கரர் கொடுக்கமாட்டார். அவர்கள் வெளியில் கயிற்றில் தொங்கும், வெட்டிய நோனா மார்க் பால் டின்னில் தேநீர் அருந்த வேண்டும். அப்படி சாதி வேற்றுமை ஒரு காலத்தில் அந்த அரசடியில் இருந்தது.

அந்த அரசடிச் சந்தியில் சங்கரின் பராமரிப்பில் ஒரு வைரவர் கோயில் இருந்தது. அதற்கு முன்னால் ஒரு பழைய ஆழமற்ற கிணறு. அந்தக் கிணற்றுத் தண்ணீர் உப்பு கசப்பு இல்லாத நல்ல தண்ணீர். இந்தக் கிணறு யாழ்பாணத்தை ஆண்ட சங்கிலியன் என்ற அரசன் காலத்தில் வெட்டிய கிணறு. போர்த்துக்கேயர்களுடன் அவன் வண்ணை வீரமஹா காளி அம்மன் கோவில் வீதியில் போர் புரியும்போது, அவனுடைய வீரர்கள் இந்த கிணற்றில் வந்து தண்ணிர் குடித்துச் சென்றதாக அந்த ஊர்ச் சனங்கள் சொல்வார்கள். அந்தச் சுற்றாடலில் உள்ள ஏனைய கிணறுகள் சற்று உப்புத் தன்மை உள்ளவை. அந்தப் பகுதியில் உள்ள இன்னொரு நல்ல தண்ணீர் கிணறு, அருகாமையில் உள்ள வண்ணை வீரமஹா காளி அம்மன் கோவில் கிணறு. வைரவர் கோவிலடிக் கிணற்றைப் போல் நல்ல நீர் உள்ள கிணறு. கோவில் கிணற்றிலும் எல்லோரும் தண்ணீர் அள்ள அனுமதி கிடையாது. ஏனென்றால் அது கோவில் உரிமையாளருக்கு சொந்தமான கிணறு. அங்கு ஒரு பலகையில் "இந்தக் கிணறு கோவில் கிணறு. அசுத்தமானவர்கள் தண்ணீர் அள்ளக்கூடாது" எழுதி இருந்தது. அந்த அறிவிப்பை பார்த்து தானோ என்னவோ சங்கரப்பிள்ளையர், வைரவர் கோவிலடி கிணற்ருக்கு அருகே ஒரு எச்சரிக்கைப் பலகை போட்டு இருந்தார். "உத்தரவின்றி இந்த கிணற்றில் தண்ணீர் அள்ளக்கூடாது" என்று அந்த பலகையில் எழுதி இருந்தது. அந்த வைரவ ருக்கு

**ஏன் ஐயா கிணற்றைச் சுத்தி இவ்வளவு கூட்டம்? யாரும் விழுந்து தற்கொலை செய்து விட்டார்களோ?'' கூட்டத்தில் நின்ற என் அப்பாவுக்குத் தெரிந்த ஆறுமுகத்தாரைக் கேட்டேன்.**

சங்கரப்பிள்ளை அடிக்கடி பொங்கிப் படைப்பார் ஏனென்றால் வைரவர் சங்கரப் பிள்ளை கடையின் காவல் தெய்வம்.

காலப்போக்கில் யாழ்ப்பாண சமூகத்தில் தீண்டாமை சற்று குறைந்து கொண்டே வரத் தொடங்கியது. தட்டார் தேரு, சிவியார் தெரு, பறங்கித் தெரு என்று அழைக்கப்பட்ட வீதிகள் எல்லாம் பெயர் மாறத் தொடங்கின. இலங்கைக்கு 1948 சுதந்திரம் கிடைத்த பின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இருந்த கட்டுப்பாடுகள் சற்றுக் குறையத் தொடங்கின அதனால் தமிழ் நாட்டில் தோன்றிய ராமசாமி பெரியார் இயக்கத்தை பின் பற்றி சில முற்போக்கு கொள்கை உள்ள பத்திரிகைகள் வரத் தொடங்கின அதோடு அந்தக் கொள்கை உள்ள சில குழுக்களும் யாழ்ப்பாணத்தில் தோன்றின.

சங்கரப்பிள்ளையின் வைரவர் கோவிலடி கிணற்றிலும் இந்த மாற்றம் தென்படத் தொடங்கியது. நல்லூர் திருவிழாவுக்கு காவடி எடுத்து வருபவர்கள் எல்லோரும் அங்கு தண்ணீர் குடிக்கத் தொடங்கினர். சங்கரப்பிள்ளையருக்கு காவடி எடுத்து வருபவர்கள் என்ன சாதி என்று தெரியாததால் தன்னுடைய அனுமதி இல்லாமல் அந்த கிணற்றில் தண்ணீர் அள்ளி குடிக்கக்கூடாது என்று நீண்ட கயிற்றுடன் இருந்த வாளியைத் தன் கடைக்குள் கொண்டு போய் வைத்துவிட்டார். வைரவர் கோபிப்பார் அதனால் நான் அனுமதிக்க மாட்டேன் என்பார் கேட்பவருக்கு.

***   ***   ***

ஒரு நாள் வைரவர் கோவிலடி கிணற்றை சுற்றி ஒரே கூட்டம். எல்லோரும் கிணற்றுக்குள் ஒன்று மிதப்பதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் போய் பார்த்தேன்.

"ஏன் ஐயா கிணற்றைச் சுத்தி இவ்வளவு கூட்டம்? யாரும் விழுந்து தற்கொலை செய்து விட்டார்களோ?" கூட்டத்தில் நின்ற என் அப்பாவுக்குத் தெரிந்த ஆறுமுகத்தாரைக் கேட்டேன்.

"என்ன தம்பி உமக்கு தெரியாதா? சங்கரப்பிள்ளையரோடை கோபித்துக்கொண்டு ஒரு செத்த தெரு நாயை இந்தக் கிணற்றுக்குள் போட்டு விட்டாங்கள் யாரோ" என்றார் ஆறுமுகத்தார். அவரது கதையிலேயே அவரும் சங்கரப்பிள்ளை வகையறாதான் என்பதைத் தெரிந்துகொள்ளத் தனித் திறமை தேவையில்லை.

"யார் இதைச் செய்தவர்கள் மாமா?" நான் கேட்டேன்.

:"வேற யார் இந்த கொம்யூனிஸ்ட் குழுக்கள்தான். அவர்கள்தான் சாதி வேற்றுமைக்கு எதிரிகள்"

"இந்தக் கிணற்றில் பரிசுத்தம் போய்விட்டது மாமா. இனி ஆரும் இந்த கிணற்று தண்ணீர் குடிக்கமுடியாது. இனி என்ன செய்யப் போகிறார் சங்கரப்பிள்ளையர்" என்று அறுமுக மாமாவின் வாயை நான் கிண்டினேன். .

"இனி என்ன, இந்த கிணற்றை சுத்தப்படுத்த வேண்டும் கன காலமாய் இந்த கிணறு சுத்தம் செய்யவில்லை பாசி படர்ந்து போயிருக்கிறது" அறுமுக மாமா சொன்னார்.

இதுதானோ என்னவோ செத்த தெரு நாயை கிணற்றுக்குள் யாரோ போட்டுவிட்டார்கள் கிணற்றை சங்கரப்பிள்ளையர் சுத்தப் படுத்தட்டும் எண்டு என்று என் மனதுக்குள் நினைத்தேன்.

"அது இருக்கட்டும மாமா இப்ப இந்தக் கிணற்றைச் சுத்தப்படுத்தப்போவது யார்?" என்று நான் கேட்டேன்.

"எங்கட சனங்கள் இந்தக் கிணற்றுகளுக்குள்ள இறங்கி சுத்தப்படுத்துவது கிடையாது. அந்தப் பக்கத்தாக்கள் (உழைக்கும் மக்கள் வாழும் பகுதியைக் காட்டுகிறார்) தான் இந்த




# செத்தல் மிளகாய்ச் சொதி



கடந்த வாரம் வற்றல் குழம்பு பற்றிப் பார்த்தோம். வற்றலாக்கப்பட்ட மரக்கறிகளைக் கொண்டு ஆக்கப்படும் அந்தக் குழம்பை நீங்கள் பலரும் ஆக்கி ருசித்திருப்பீர்கள். இந்த வாரம் செத்தல் மிளகாய்ச் சொதியை ஆக்குவது பற்றிப் பார்ப்போம்.

சொதி என்றாலே அது குழம்புக்கு நேர் எதிரானது என்றே எல்லோருக்கும் தெரியும். குழம்பு உறைப்பாக இருக்கச் சொதியோ அதிலிருந்து வேறுபட்டிருக்கும். பாற் சொதி என்பது அதிலும் ஒருபடி மேலே பொய் ருசியில் உச்சம் தொட்டிருக்கும். குழம்பைவிட உறைப்புத் தன்மை குறைவாகவும், கெட்டித் தன்மையற்றதாகவும் தயாரிக்கப்படுகின்ற சொதி வகைக் கறியில் செத்தல் மிளகாய்ச் சொதி தனித்துவமானது. காரணம் இது சற்றே உறைப்பான சொதி.

**என்னென்ன பொருள்கள் தேவை**

பெயர் என்னவோ செத்தல் மிளகாய்ச் சொதி என்றிருந்தாலும் இதைக் கடலுணவுகளிலேயே தயாரிக்கிறார்கள். மீன், கணவாய், நண்டு, இறால் ஆகிய கடலுணவுகளில் ஏதாவது ஒன்றுடன் செத்தல் மிளகாய்கள் சேரும் சொதிக் கறியாக இது இருக்கிறது. உதாரணத்துக்கு நாம் மீனில் இந்தக் கறியை ஆக்குவது பற்றிப் பார்ப்போம்.

துண்டுகளாக்கப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்ட அரைக் கிலோ நிறையுடைய மீன், செத்தல் மிளகாய்கள் - 8, தேங்காய்ப்பால் - பாதித் தேங்காயிலிருந்து பெறப்பட்டது. பழப்புளி - 25 கிராமளவில், உப்பு - சிறிதளவு.

**எப்படிச் சமைப்பது?**

சட்டி ஒன்றுக்குள் சிறிதளவு நீர் ஊற்றி அதில் செத்தல் மிளகாய்களைப் போட்டு அடுப்பில் வைத்து அது நன்றாகக் கொதிக்கும் வரை எரிக்கவும். கொதித்ததும் செத்தல் மிளகாய்களைத் தனியாக எடுத்து அம்மியில் வைத்துச் சொர சொரப்பாக அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள். கையோடு செத்தல் மிளகாய் அவித்த அந்தச் சிறியளவு நீரில் மீன் துண்டுகளைப் போட்டு அதற்குள் பழப்புளியைக் கரைத்துவிட்டு உப்பையும் போட்டுக் கொதிக்க வையுங்கள். கொதித்ததும் தேங்காய்ப் பாலை விட்டு அரைத்து வைத்துள்ள செத்தல் மிளகாய்க் கலவையையும் சேர்த்துக் கொள்ளுங்கள். நன்றாகக் கொதித்ததும் இறக்கினால் ருசியான செத்தல் மிளகாய்ச் சொதி தயார்.

## வைரவர்...

மாதிரி வேலையள் செய்யிறவை. கந்தன் எண்டொருத்தனை எனக்கு தெரியும். அவனுக்குத் தொழில் கிணறுகள் சுத்தம் செய்வது, விறகு வெட்டுவது, தென்னை மரம் ஏறி தேங் காய் பிடுங்குவது வீடுகளின் வளவில் உள்ள தோட்டத்துக்கு, பாத்தி கட்டி தண்ணீர் பாச்சு வது தான்.."

"அவன்தான் மாமா எங்கள் வீட்டுக்கும் வந்து கிணறு சுத்தம் செய்கிறவன். தேங்காய் பிடுங்கிறவன். விறகு வெட்டிறவன். அப்பா வுக்கு வை.சி. சி.கு. சுருட்டு வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கிறவன். அவன் நல்லவன்..."

"அதுதான் தம்பி நானும் யோசிக்கிறன். சங்கரப்பிள்ளையருக்குக் கிணற்றைக் கழுவ யாரைச் சிபார்சு செய்வது எண்டு" ஆறுமுகத்தார் சொன்னார்.

"மாமா எனக்கு ஒரு யோசனை வருகுது சொல்லட்டுமா?"

"சொல்லு தம்பி. உனக்கு ஆரையும் தெரி யுமே?"

"மாமா நீங்கள் சொன்ன அரச வெளி கந்தனைப் பிடிச்சால் என்ன? அவனுக்கு இதுதான் தொழில். கிணறு சுத்தப்படுத்திற எல்லா உபரணங்களும் அவனிட்ட இருக்கு. அவன் மகனோட வந்து செய்வான். கோயில் கிணறு எண்டபடியால் காசும் அதிகம் வாங்க மாட்டான்"

"நீ என்னடா தம்பி விசர்க் கதை கதைக்கிறாய். இது கோவில் கிணறடா சங்கரப்பிள்ளையர் உண்ரை யோசனைக்கு ஓம் படுவரோ தெரியாது".

"நான் ஒண்டு சொல்லறன் மாமா".

"என்ன சொல்லு தம்பி"

"எண்டை அப்பாவுக்கு சங்கரப்பிள்ளையரை நீண்ட காலமாக தெரியும். சங்கரப்பிள்ளை அப்பாவிடம் உதவிகள் பெற்றிருக்கிறார். அதனால என் அப்பாவை கொண்டு நான் கந்தனை கொண்டு வைரவர் கோவில் கிணற்றை கழுவச் சொல்லி சங்கரப்பிள்ளையரோடு பேசச் சொல்லுறன்"

"அது நல்ல யோசனை. நீ அப்படியே செய் தம்பி" என்றார் ஆறுமுகத்தார்.

நான் இந்த விசயத்தை அப்பாவிடம் அவர் சந்தோசமாக இருக்கும் நேரம் பார்த்து சொல்ல முடிவெடுத்தேன். இதைக் கெதியிலை அப்பாவுக்குச் சொல்லி கிணற்றை சுத்தப்படுத்த வேண்டும். அதே சமயத்தில் அந்தக் கிணற்றில் மற்றவர்களும் தண்ணீர் அள்ளி குடிக்க இனி விடவேண்டும் என்ற ஒரு தீர்மானம் என் மனதில் வந்துவிட்டது. ஓரளவுக்கு தமிழ் திராவிட கழக இலக்கண நூல்களை வாசித்து பெரியார் அறிஞர் அண்ணாதுரையின் கொள்கை என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அது என் அம்மாவுக்கு தெரியும். சில சமயம் அவள் என்னுடன் வாதாடுவாள்..

அன்று மத்தியானம் அப்பா மதிய போசனம் அருந்திவிட்டு வாயில் சுருட்டுடன் ஈஸிசேரில் மதராஸ் ஹிந்து பேப்பரை வாசித்துக்கொண்டிருந்தார். எனக்கு தெரியும் அதுதான் நல்ல நேரம் அப்பாவோடு பேசுவதற்கு என்று. நான் போய் அவருக்கு பக்கத்தில் நின்றேன்

"என்ன இந்திரன் இங்கே வந்து நிக்கிறாய்?" என்று என்னை அப்பா கேட்டார்

"ஓமப்பா ஒரு முக்கிய விசயம் உங்களோட பேசவேண்டும்"

"என்ன விஷயம் சொல்லு? ஏதும் உனக்கு படம் பாக்க காசு வேணுமே?"

"எனக்கு காசு ஒண்டும் வேண்டாம் அப்பா. இந்த வைரவர் கோயில் கிணறு விசயம் பற்றி உங்களிடம் நான் பேசவேண்டும்"

"ஓம் நானும் கண்டனான். அந்த கிணற்றைச் சுற்றி கூட்டம் நிண்டு பார்த்துக்கொண்டிருந்ததை. ஒரு ஆள் வந்து எனக்குச் சொல்லிச்சு அந்தக் கிணறுகுள்ளை நாய் ஒண்டு செத்து கிடக்காம். இனி என்ன அதை எங்கடை வீட்டு கிணறை சுத்தப்படுத்தும் கந்தனைக்கொண்டு சுத்தப்படுத்த வேண்டியதுதானே" என் அப்பா சொன்னார்.

"அதுதான் பிரச்சனை அப்பா. அந்தக் கிணற்றுக்குள் இறங்கி அந்தச் செத்த நாயை வெளியே எடுத்து கிணற்றை சுத்தப்படுத்துவதுக்கு எங்களுடைய சங்கரப்பிள்ளையருடைய அனுமதி தேவை"

"அது பிரச்சனை இல்லை. கந்தன்தான் இந்த அயலில் உள்ள வீடுகளில் உள்ள கிணறுகளை சுத்தப்படுத்துவது என்று சங்கரப்பிள்ளையருக்குத் தெரியும். அம்மன் கோயில் கிணற்றையும் அவன்தான் சுத்தப்படுத்தியவன்" அப்பா சொன்னார்.

"அப்படியா அப்பா? அதுபோதும் நீங்கள் அவர் சங்கரப்பிள்ளையருக்குச் சொல்லி கந்தனைக் கொண்டு அந்தக் கிணற்றை சுத்தப்படுத்தச் சொல்லுங்கள். நீங்கள் அவருக்கு கன உதவி செய்திருக்கிறீர்கள். மாநகரசபை அவருடைய கடையை அகற்றும்படி சொன்னபோது நீங்கள்தானே மேயருடன் கதைத்து அதைத் தடுத்து நிறுத்தியது, அதனால் நீங்கள் சொன்னால் அவர் ஓம் என்பார்"

"சரி இந்திரன். உந்த விசயத்தை என்னிடம் விடு. நான் பேசித் தீர்த்து வைக்கிறன்" அப்பா சொன்னார்.

எனக்குத் தெரியும் என் அப்பா சொன்னால் அதைச் செய்து முடிப்பார் என்று.

*** *** ***

நான் எடுத்த முயற்சி வீண் போகவில்லை. சில மணி நேரத்தில் அப்பா சங்கரப்பிள்ளையரோடு பேசி அவரின் சம்மதம் பெற்று என்னிடம் வந்து சொன்னார் "இந்திரன் நீ போய் கந்தனை அந்த கிணறை சுத்தப்படுத்தச் சொல்லு சங்கரப்பிள்ளையர் ஓம் எண்டிட்டார். இனி பிரச்சினை இல்லை."

எனக்கு ஒரே சந்தோசம் வைரவர் கோவிலடி பிரச்சினையை தீர்த்து விட்டேன் என்று. சில மணி நேரத்தில் கிணற்றை சுத்தப்படுத்தும் உபகரணங்களுடன் கந்தன் தன் மகனுடன் கிணற்நோக்கிப் போவதைக் கண்டேன். அவனுக்குப் பின்னால் நானும் போய் சுத்தப்படுத்துவதை பார்த்துக் கொண்டிருந்தே. சங்கரப்பிள்ளையர் அவனுக்கு அப்படி செய், இப்படிச் செய் என்று ஓடர் கொடுத்து கொண்டு இருந்தார்.

3 மணி நேரத்தில் கிணறு சுத்தப்படுத்தப்பட்டது. அழுகிய நிலையில் உள்ள நாயின் உடலை கந்தன் வெளியே எடுத்தான். ஒரே மணம். அத்தோடு கிணற்றில் இருந்த குப்பைகள் எல்லாவற்றையும் வெளியே கொண்டு வந்து தன் தள்ளுவண்டியில் ஏற்றினான். கொண்டீஸ் என்ற பொட்டாசியம் பெர்மாங்கனேட் இரசாயன தூள்களை கிணற்றுக்குள் கந்தன் தூவினான் நீரை பரிசுத்தமாக்க. நான் கந்தன் செய்வதைப் பார்த்துக்கொண்டி ருந்தேன். ஏனென்றால் இதைத் தொடங்கியவன் நான். அதனால் நன்றாகச் செய்து முடிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். இதில் சாதி என்பது பிரச்சினை இல்லை. இதனை ஒரு பொதுக் கிணறு ஆக்கவேண்டும் என்பது என்னுடைய ஆர்வம்.

"உங்களுக்கு எல்லாம் இப்ப திருப்திதானே சங்கரப்பிள்ளை மாமா" நான் கேட்டேன் . ஆறுமுகத்தார் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

"ஓம்! எனக்கு தெரியும் தம்பி, நீதான் உன்ர அப்பரிட்டச் சொல்லி என்னோட பேசச் சொல்லி ஒழுங்கு செய்தனி" சங்கரப்பிள்ளையர் சொன்னார்.

"சங்கரப்பிள்ளை மாமா இந்தக் கிணற்றுக்குள் செத்து கிடந்தது வைரவருடைய வாகனம். நீங்கள் இந்த கிணற்றில எல்லாச் சனங்களையும் தண்ணீர் குடிக்க விடாதபடியால் வைரவரின் வாகனம் கோபப்பட்டு கிணற்றுகுள்ள விழுந்து தற்கொலை செய்துவிட்டுது"

'நீ சொல்றது உண்மையோ தம்பி?" அவருக்கு வைரவர் மேல் அவ்வளவு நம்பிக்கை .

"உண்மைதான் மாமா. இது உங்களுக்கு புரியாது. வைரவர் இந்தச் செய்தியை உங்களுக்குத் தன்ரை வாகனத்தைக்கொண்டு மறைமுகமாகச் சொல்லி இருக்கிறார். இனியாவது யோசியுங்கோ. இந்தக் கிணற்றை பொதுக் கிணறாக இனியாவது மாற்றுங்கோ. மாற்றும்போது அந்த எச்சரிக்கை போர்ட்டை எடுத்து விடுங்கோ" என்றேன்.

சற்று நேரம் யோசித்துவிட்டு சொன்னார், "தம்பி இப்ப எனக்கு புரியுது. நீ சொன்ன மாதிரி வைரவர் எனக்கு ஒரு செய்தியைச் சொல்லிவிட்டார் என்று. இனி இது பொதுக் கிணறு. இந்த போர்ட் வேண்டாம்" என்று போய் அந்த எச்சரிக்கை போர்டை பிடுங்கி எடுத்தார் சங்கரப்பிள்ளை. பிறகு சங்கரப்பிள்ளையர் கந்தனைப் பார்த்துக் கேட்டார் "கந்தா மூன்று மணி நேரம் இந்த கிண ற்றை சுத்தப் படுத்தனாய் என்ன கூலி கேட்கிறாய்?" என்று.

அவன் சொன்னான் "சாமி எனக்கு பணம் வேண்டாம். இது வைரவர் கோயில் கிணறு நான் செய்த வேலை வைரவருக்கு எனது அர்ப்பணமாக இருக்கட்டும்"என்று.

அப்போது நல்லூர் கந்தசாமி கோவில் மணி ஓசை கேட்டது.

# உதுகளெல்லாம் தேவையோடைதானோ?



● கதிரேசன் காத்தவராயன்

கனகாலத்துக்குப் பிறகு நேற்றைக்கு யாழ்ப்பாணத்துக்குப் போனனான்லே... எல்லாம் வழமை மாதிரியே கிடந்துது.. கனகாலத்தக்குப் பிறகு சனசந்தடியைக் கண்டது சந்தோசமாயிருந்துது எண்டாலும் பயமாத்தான் கிடந்தது. சிரிப்பாயும்தான் கிடந்துது. இதுகளை ஆரோடையும் கதக்காட்டி தலை வெடிக்குமாப்போலை கிடந்துது... முருகேசர் வீட்டுப் பக்கம் போனன். அங்கை சம்பரும் சுதனும் இருந்தினம்.

"என்னப்பா கதிரேசண்ணை இந்தப் பக்கம்?" எண்டபடி முருகேசர் உற்சாகமாய் வரவேற்றார். "கதிரேசண்ணை! நேற்று தம்பதியாய் போனமாதிரிக் கிடக்குது... பயம் மாறிவிட்டுது போலை?" எண்டார் சம்பர் ஒரு சிரிப்போடை. "ஓஓ... நெடுகவும் வீட்டுக்கை இருக்கேலுமோ? அதுதான் மனிசியையும் கூட்டிக்கொண்டு ஒரு படம் பாப்பமெண்டு யாழ்ப்பாணம் போன்னான்" எண்டு சொல்லிச் சிரிச்சன். படம் பாத்தது எண்ட கதையை காதிலை விழுத்தினபடி வந்த தம்பர் "என்ன? தியேட்டருகளும் திறந்தாச்சோ?" எண்டு கேட்டபடி வந்து இருந்தார். எல்லாரும் சிரிச்சம்.

"அது ஒண்டுதான் இன்னும் திறக்கேல்லை... மற்றும்படி எல்லாம் வழமை மாதிரியல்லே நடக்குது?" எண்டு சுதன் சொன்னான். சந்தோசமாயோ எரிச்சலாயோ எண்டது விளங்கேல்லை. "இதுக்குக் காரணம் சொல்லத் தெரியேல்லைப்போலை... சாராயக் கடையளைத் திறக்காட்டி சீனிக்குத் தட்டப்பாடு வருமெண்டதைக் கண்டுபிடிச்சிருக்கிறாங்கஎல்லே?" எண்டார் முருகேசர் நக்கலாய். "அதுக்கும் சீனிக்கும் என்னண்ணை சம்மந்தம்?" எண்டுது தம்பர். "குடிக்கிறவனாலை விட்டுட்டு இருக்கேலாதாம்.. சீனியை முழுதுமாய் எடுத்துக் கசிப்பு வடிச்சிடுவங்களாம்.. சீனியைப் பாதுகாக்கத்தான் பாறுகளைத் திறந்ததாம்" எண்டு சம்பர் சொல்ல "அப்பிடியெல்லாம் யோசிக்கிறாங்களோ?" எண்டு தம்பர் ஆச்சரியப்பட்டுது.

"கதிரேசு மாமா றோட்டுகள் எப்பிடியிருந்துது..?" எண்டு சுதன் கேட்டான். "றோட்டு நீளமும் மரக்கறிக் கடையள் பழக் கடையள் மீன் வியாபாரம் எண்டு கலகலக்குது... சும்மா சொல்லக்கூடாதடா சுதன், சாதாரண நாளுகளைவிட இப்பத்தான் சோக்காக்கிடக்குது..." எண்டன் நான். "பள்ளிக்கூடச் சந்தடியில்லை.. ரியூட்டறியளின்ரை சந்தடியள் இல்லை அதுகளுமெண்டால் வலுதிருவிழாத்தான் என்ன?" எண்டார் முருகேசர்.

"இப்ப கொரோனாவின்ரை ஆட்டமும் நல்லாக் குறையுதுபோலை?" ஏண்டார் தம்பர் தன்ரை வழமையான அப்பாவித்தனத்தோடை. "அது நாங்கள் கதைக்கக்கூடாது பாருங்கோ... முதலிலை ஒராளுக்குக் கொரோனாவெண்டால் அவரோடை தொடர்பானவை குடும்பமெண்டெல்லாருக்கும் கட்டாயமாச் சோதிச்சதல்லே? இப்ப அதுகளெல்லாம் நடக்குதோ? இல்லையல்லே அப்ப கொரோனா குறைவாய்த்தானே இருக்கும்?" எண்டார் முருகேசர். "எனி உங்கை கனபேர் காச்சல் தடிமன் எண்டு கொண்டு தாங்களாயே குடிநீரை வைச்சுக் குடிச்சுப்போட்டு சத்தமில்லாமல் இருக்கினமெண்டும் கேள்வி" எண்டார் சம்பர். "பயம் விட்டுப்போச்சுது" எண்டார் முருகேசர்.

"உதுகள் பெரிய இடத்துப் பிரச்சனையள் எண்டல்லே நெடுகவும் சொல்லுறனீங்கள்... அதுகளை விடுங்கோண்ணை.. எல்லாம் வழமை மாதிரியாயல்லே நடக்குது? எனக்கொரு சந்தேகம்... றோட்டுக்கு றோட்டு குறுக்காலை கம்பியளைக் கட்டிவைச்சுக் கொண்டு நிண்டு என்ன செய்யினம்? ஏன் நிக்கினம்?" எண்டார் தம்பர். தம்பரின்ரை இந்தக் கேள்வியளிலை உண்மையாய் எனக்கும் சரியான உடன்பாடுதான் பாருங்கோ. சுதன் பெரிசாச் சிரிச்சான். "அப்பதானே நாங்களும் இருக்கிறம் நினைச்சால் மறிச்சுக் கேப்பம் எண்டிறது ஞாபகமிருக்கும்?" எண்டு போட்டு பிறகும் சிரிச்சான் சுதன்.

"இயல்பு நிலை எண்டிறதை உண்டாக்கி விட்டால் சனம் தட்டுப்பாடுகள் விலைப்பிரச்சனை அதுவிதுவெண்டு யோசிச்சுக் கேள்வி கேக்குமெண்ட பயம்தான். நெருக்கடியை இறுக்கமாய் வைச்சிருந்தால் எல்லாற்றை கவனமும் அதிலையல்லே இருக்கும்?" எண்டார் நிதானமாய் முருகேசர். "அப்ப அடைக்கோழிக்கு இறகு செருகின மாதிரியெண்டியளோ?" எண்டார் தம்பர். "நீயம் தம்பு இப்ப நல்லாய் யோசிக்கிறாய்" எண்டார் சம்பர்.

"விலைவாசி, பதுக்கல், அதுவிது வெண்டு சனத்தின்ரை பிரச்சனையளை திசைதிருப்பிற வேலைதான் உதுகளும்.. முழிச்சு கேக்க வெளிக்கிட்டால் திரும்பவும் கொரோனா கூடுமோ தெரியாது... என்ன முருகேசண்ணை அப்பிடியயுமிருக்கலாமல்லே?" எண்டுபோட்டு வீட்டை வந்திட்டன்.

# சர்ச்சையைக் கிளப்பும் லேடி காஷ்!

விஜய் தொலைக்காட்சியில் பிக் பாஸ் நிகழ்ச்சியின் ஐந்தாவது பருவம் தொடங்கிவிட்டது. போட்டியாளர்கள் இப்போதைக்கு சிரித்து மகிழ்ந்து உறவாடி வருகின்றார்கள். போகப் போக சண்டையும் சச்சரவுமாக அது சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலகத் தமிழர் எண்ணிக்கையில் அதிக பார்வையாளர்களைக் கொண்ட ரியாலிட்டி ஷோ என்று கருதப்படுவது பிக் பாஸ்.

மற்றொரு தொலைக்காட்சியான ஜி தொலைக்காட்சியும் விறுவிறுப்பான ரியாலிட்டி ஷோ ஒன்றைத் தொடங்கி மக்களைக் கவர முயற்சிக்கிறது. சர்வைவர் என்கிற அந்த நிகழ்ச்சியில் வசதி வாய்ப்புகளற்ற ஒரு தீவில் போட்டியாளர்களைக் களமிறக்கி அவர்களின் மன மற்றும் உடல் தைரியத்தைச் சோதிக்கிறது இந்தப் போட்டி.

கடுமையான சவால்கள் நிறைந்த போட்டி, நெருக்கடியான வாழ்க்கைச் சூழல் என்று போட்டியின் விறுவிறுப்பைக்கூட்ட பலவற்றையும் செய்கிறார்கள். கழிப்பறை மற்றும் குளியல் உள்ளிட்ட எந்த வசதிகளும் இல்லாத நிலையிலும் பெண்கள், ஆண்கள் என போட்டியாளர்கள் சவால்களைச் சந்தித்தாக வேண்டும்.

இந்த ஷோவில் மலேசியாவைச் சேர்ந்த ஸிக்காப் பாடகியான லேடி காஷ் ஒரு போட்டியாளராகப் பங்கேற்றிருந்தார். முதன்மையான 8 போட்டியாளர்களுள் ஒருவராக வந்த அவர் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார். இந்தப் போட்டியில் ஒவ்வொரு வாரமும் ஒருவர் வெளியேற்றப்பட்டு கடைசியில் ஒருவர் மட்டுமே ஒரு கோடி ரூபா பரிசை வெல்வார்.

தான் போட்டியிலிருந்து வேண்டுமென்றே வெளியேற்றப்பட்டதாக இப்போது குற்றஞ்சாட்டியிருக்கிறார் லேடி காஷ். கடுமையான சவால்களைக் கொண்ட இந்தப் போட்டியில் போட்டியாளர்களின் உடல் நலனைக் கருத்தில்கொள்ளாமல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார் லேடி காஷ்.

தான் நிகழ்ச்சியிலிருந்து வெளியேறவில்லை என்றும் வெளியேற்றப்பட்டேன் என்றும் நிகழ்ச்சியில் எராளமான பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் தனது சமூக ஊடகங்களில் தெரிவித்திருக்கிறார் காஷ்.

போட்டியாளர்களில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டபோதும் அது பற்றிக் கவலைப் படாமல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதிலேயே தயாரிப்பு நிர்வாகம் கவனம் செலுத்தியதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

ரியாலிட்டி ஷோக்கள் என்றாலே சர்ச்சைகளுக்கும் குறைவிருக்காது என்கிற நியதியை இப்போது லேடி காஷ் சர்வைவர் ஷோவிலும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.






# அடுத்த தடுப்பூசியும் வந்தது களத்திற்கு!

கொரோனா பெருந்தொற்றுக்கான தடுப்பூசிப் பிரச்சினையே இன்னும் முடிந்தபாடாயில்லை என்கிறபோது மற்றொரு தடுப்பூசியும் தலையெடுக்கத் தொடங்கியிருக்கின்றது. தடுப்பூசி போடவேண்டுமா இல்லையா என்பது இங்கே பலரிடமும் இருக்கும் கேள்வி. கொரோனாவிலிருந்து விலகியிருக்க தடுப்பூசி ஒன்றேதான் வழி என்று மருத்துவ உலகம் எவ்வளவுதான் படித்துப் படித்துச் சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ளாது, தடுப்பூசி போட்டுக்கொண்டால் ஆண்மைக் குறைவு ஏற்படுகிறது, உடல் பலவீனமாகிறது என்பது போன்ற வதந்திகளை நம்பிக்கொண்டு ஊசிபோடமல் பலரும் ஊர்சுற்றி வருகிறார்கள். அப்படி ஊசி போடாதவர்கள் அரச அலுவலகத்திற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்ட தடை அறிவித்தல்கூட அண்மையில் சமூக ஊடகங்களில் பெரும் சர்ச்சையாக மாறியிருந்தது.

இந்த நிலையில் மலேரியா நோயிலிருந்து பாதுப்பதற்கும் தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது. மலேரியா நோயால் கடுமையான பாதிப்பை எதிர்கொள்ளும் ஆபிரிக்க நாடுகளில் இந்தத் தடுப்பூசியைப் மனிதர்களுக்கு ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டு கால ஆய்வுகள், போராட்டங்களுக்குப் பின்னர் முதல் முறையாக இந்தத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மனிதர்களைக் கொல்லும் நோய்களில் மலேரியாவுக்கு முக்கியமான இடமுண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மனித குலத்திற்கு மலேரியா ஒரு சவாலாக இருந்து வந்திருக்கிறது. நூறு ஆண்டு கால ஆராய்ச்சிக்குப் பின்னர் மருத்துவ உலகம் இப்போது அதற்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்திருக்கின்றது.

கானா, கென்யா மற்றும் மலாவி ஆகிய நாடுகளில் முன்னோட்டத் நோய்த்தடுப்புத் திட்டங்களின் வெற்றிக்குப் பிறகு, இப்போது மலேரியா அதிகமாகப் பரவும் சஹாராவுக்கு கீழே இருக்கும் ஆப்பிரிக்க நாடுகளிலும் தடுப்பூசி போட வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

"இது ஒரு வரலாற்றுத் தருணம்" என்று உலக சுகாதார நிறுவனத்தின் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.

"நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மலேரியா தடுப்பூசி, அறிவியல், குழந்தை ஆரோக்கியம் மற்றும் மலேரியா கட்டுப்பாடு ஆகியவற்றில் ஒரு மைல்கல்" என்று அவர் கூறினார்.

இலங்கையில் இருந்து மலேரியா நோய் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறிப் பல ஆண்டுகளாகிவிட்டன. எனினும் அவ்வப்போது நாட்டின் சில இடங்களில் இருந்து மலேரியா நுளம்பைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்று அதிகாரிகள் கூறும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. மலேரியா இங்கு மீண்டும் தலையெடுத்தால் அதற்கான தடுப்பூசி அட்டையுடனும்தான் பிரதேச செயலகச் சேவையைப் பெறச் செல்லவேண்டிய காலமும் வரக்கூடும்.

# எமையறிதல்

27

ஐயங்கொண்டான் சுவாமிகள்

அச்சம் என்பது கற்பனை. அச்சம் என்பது வெறும் எதிர்மறை எதிர்பார்ப்பே. அச்சமென்பது தவிர்க்கப்படவேண்டியதே. அதனை எப்படிச் செய்வது? அதற்காக அச்சமென்பது கற்பனை என எண்ணிக்கொண்டிருப்பதால் சரியாகுமா? எதனையும் எதிர்கொள்ளத் தயாராயிருத்தலா? வருவதை வரட்டும் சந்திப்போம் என்கிற எண்ணமா? எது? எப்படி?

எதிர்பார்ப்பு என்பதிலிருந்து உருவாகுவது அச்சம் எனக் கொண்டால் எதிர்மறைவிளைவுகள் தொடர்பான எதிர்பார்ப்புதான் அச்சமாகிறது. எதிலுமே இருபக்கங்கள் எண்டு. எதிர்பாரப்பிற்கும் அவ்விருபக்கங்களிருப்பது தவிர்க்க முடியாதது. நேர் எதிர்பார்ப்பு இன்பமானது. ஏப்போதுமே விரும்பப்படுவது. ஆனால் எப்போதுமே நிகழ்ந்துவிடுகிறதா? இல்லையே. அப்படியேதான் எதிர்மறை எதிர்பார்ப்பும் எப்போதும் நடந்துவிடுவதில்லை.

எதிர்பார்ப்பு என்பது நேரானதோ எதிர்மறையானதோ இரண்டுமே கற்பனைதான். எப்போதும் அப்படியே நடந்துவிடுபவையுமல்ல. யதார்த்தம் என்பது ஏராளமிருக்கையில் கற்பனையில் எண்ணங்களை ஓடவிடுவதும் நம்பியிருப்பதும் புத்திசாலிகளினது செயல் அல்ல. அதுதான் முக்கியமானது. எது நடந்தாலும் எதிர்கொள்ள வேண்டியது எமது கடமை. தன்னம்பிக்கையுடனான முயற்சி அவசியமானது. அது எதுவரினும் தாங்கி நிமிரும் வலுவை எமக்களிக்கும்.

அப்படியாயின் எதிர்பார்ப்பு என்பது தவிர்க்கப்பட வேண்டியதொன்றா? எனும் கேள்வி எழுவது இயல்பானது. எதிர்பார்ப்பு என்பது தவிர்க்கக்கூடியதா? இல்லை என்பதற்கப்பால் பதிலிருக்குமோ தெரியாது. உண்மையும் அதுதான். அப்படியாயின் எதை எப்படி எதிர்பார்க்கலாம்? இப்பகுதியின் தொடக்கப் பகுதிகளில் கூறியதையே மிளவும் கூறவேண்டியிருக்கிறது.

எனது இயலுமை முயற்சி சூழல் தொடர்பான சுயமதிப்பீடொன்றினை சுயமாகச் செய்துகொண்டால் எதிர்பார்ப்பு என்பது ஓரளவு நியாயபூர்வமானதாக இருக்கலாம். எதிர்பார்ப்பு என்பதும் ஒரு வகைப்பட்ட ஆசைதான். எமது வரண்ட சூழலில் மழைக்காலத்தில் சறுக்கி விழாமலிருக்க ஆசை கொள்ளலாம். இது நியாயமானது. யதார்த்தமானது. அதை விடுத்து எனது முற்றத்தில் பனிச் சறுக்கு விளையாட ஆசைப்படுவது நியாயமானதா?

இதுதான் எதிர்பார்த்தலின் நியாயம். இதுதான் யதார்த்தம். மழைக்காலம் வழுக்காது என்றிருப்பதும் எப்படியோ கட்டாயமாக விழுந்துவிடுவேன் என்றஞ்சி வீட்டினுள்ளேயே இருப்பதான முடிவும் புத்திபூர்வமானவையல்ல. கவனமாக இருத்தல் என்பது முக்கியமானது. கவனமாயிருத்தல் என்பது முற்றத்தில் சேறு உருவாகாமல் தடுப்பதாக இருக்கலாமேயன்றி மாரி காலம் முழுவதும் வீட்டுக்குள்ளேயே இருப்பதாக இருக்கலாகாது. பனி கிடைக்காத தேசத்தில் அகப்பட்ட சேற்றில் சறுக்கி விளையாடுவோம் என்பது எப்படியானது?



எதனையும் அதனதன் இயல்புகளை சரியான புரிதலுடன் அறிந்து வைத்திருத்தல் அச்சமடைதலிலிருந்து விடுபட உதவும். கூடவே எனது இயலுமைகள் குறித்த சரியான மதிப்பீடும் நிச்சயமாக துணை நிற்கும். இங்கேதான் விடயம் இருக்கிறது. நான், எனதான இயலுமை என்பன தொடர்பான சரியான சுயமதிப்பீடொன்று இருக்குமாயின் நாம் பிறரது கருத்துகள், கதைகள், நம்பிக்கைகள் போன்றவற்றிலிருந்து ஒதுங்கியிருக்க முடியும். ஒருவனால் இயலாத ஒன்று அவனுக்கு அச்சமாயிருக்கலாம். அது அவனுக்கான பிரச்சனை. அவன் அஞ்சுகின்ற ஒன்றுக் குநானும் ஏன் அஞ்சவேண்டும்?

அச்சம் என்பது தொற்று நோய்தான். அந்த ஒருவனும் நானும் ஒருபோதுமே ஒன்றல்ல. அவன் வேறு. அவனது இயலுமைகள் விருப்புகள் நம்பிக்கைகள் என எல்லாமே வேறு. எனக்கும் அவனுக்கும் அவை ஒருபோதுமே ஒன்றாயிருக்க முடியாது. ஒன்று போல தோற்றங் காட்டலாம். ஆனால் ஒன்றாகவே இருக்க முடியாது. அதற்கான சாத்தியங்களும் இல்லை. யாருக்கும் இயலாதது எனக்கும் இயலாததொன்றோ என்னாலியலாதது பிறருக்கும் இயலாததே என்றும் கணித்துவிடமுடியாது. ஆக அச்சமென்பது எப்படிப் பொதுவாக முடியும்?


முதலில் கூறியதுபோல அச்சம் என்பது கற்பனை எதிர்மறை எதிர்பார்ப்புதான். அது பிறரதாக இருந்தாலென்ன எனதாக இருந்தாலென்ன கற்பனைதான் என அறிந்த பின்னும் அதையே ஏன் எண்ணிக்கொண்டிருக்கவேண்டும்? சிந்திப்போம்.

# வீட்டில் வைக்கப்பட்ட சூனியத்தை அறிந்த சிறுமி

கவனம் இது பேய்க் கதை



■ மணிமாறன் - சரசாலை ■



எங்களுக்கு 3ஆவது மகள் பிறந்த பின்னர் மனைவி நோய்வாய்ப்பட்டார். எவ்வளவோ முயன்றும் அவருடைய நோய் குணமாகவில்லை. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சேர்த்த போது மருத்துவர்கள் பலவித பரிசோதனை களைச் செய்தார்கள். அந்தப் பரிசோதனை அறிக்கைகள் எந்தவித நோய் அறிகுறிகளும் இல்லை என்றே காட்டுகின்றன என்றார்கள். ஆனால், மனைவியோ தனது வயிற்றில் குத்து (வயிற்றுவலி) உள்ளது என்றும் தன்னால் அந்த வேதனையைத் தாங்க முடியாமல் உள்ளது என் றும் சொல்லி அழுதார். எவ்வளவு முயன்றும் மருத்துவர்களால் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நிலமை இப்படியிருக்கும்போது எங்கள் 2ஆவது மகள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஓரி டத்தைக் காட்டி, "அங்க கறுத்தப்பொக்கான் இருக்குது" என்று சொல்லி எங்களுக்குப் பின் னால் ஒளித்துக்கொள்வாள். அதிலை ஒன்று மில்லை என்று சொல்லி அந்த இடத்துக்குப் போவதற்கு அவளைக் கட்டாயப்படுத்தினால் கத்துவாள்.

அது பற்றி அவள் பல தடவைகள் கூறிய போதும் அவள் ஏதோ சும்மா பயப்பிடுகிறாள் என்ற எண்ணமே எங்களுக்கு இருந்தது. பின் னர் ஒரு சந்தர்ப்பத்தில் எனது தம்பியின் பசு மாட்டைக் கொண்டு வந்து அந்த இடத்தருகில் நின்ற மரமொன்றில் கட்ட முயன்றபோது அந்த மாடு அந்த இடத்தின் அருகே போனபோதே திமிறிக்கொண்டு பின்வாங்கியது. பின்னர் வேறு ஓரிடத்தில் மாட்டைக் கட்டிவிட்டு மாலை யில் அவர் மாட்டை அவிழ்த்து வெளியேறி யபோதும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் மாடு திமிறிக்கொண்டு அந்த இடத்தை விட்டு கேற் பக்கம் இழுத்துக்கொண்டு சென்றது.

மருத்துவர்கள் நோயைக் கண்டறியாமல் திணறிக்கொண்டிருக்க, ஒரு கட்டத்தில் மனை வியின் சுகவீனம் தொடர்பில் சாத்திரம் கேட்ட போது வீட்டில் செய்வினை வைக்கப்பட்டுள்ளது என்று குறி பார்த்த அம்மா ஒருவர் கூறினார். பின்னர் அவர் வீட்டுக்கு வந்து அதை எடுக்க முற்பட்டபோது முதலில் அவர் சென்ற இடம் எனது மகள் கறுத்தப் பொக்கன் இருக்கிறது என்று பல தடவைகள் காட்டிய இடமாகும். அதிலிருந்து அந்த இடுபொருளை அவர் தோண்டி எடுத்தார்.

இன்னோர் இடுபொருள் இருப்பதாக வீட்டு விறாந்தையில் ஓரிடத்தைக் காட்டி அதில் தோண்டச் சொன்னார். மாபிள், கொங்கிறீட் எல்லாம் உடைத்து கிண்டியபோது அதற்கடியில் இருந்த இடு பொருளையும் எடுத்தார். அதன் பின்னர் எலுமிச்சைச் சாற்றில் கலந்து ஒரு மருந்தை மனைவிக்குக் குடிக்கக் கொடுத்தார். வயிற்றுக்குள் குடலில் ஒட்டியிருந்த மசுக்குட்டி (மயிர்க்கொட்டி) போன்ற கறுப்பான ஒன்றை சத்தியுடன் வெளியில் வரச் செய்தார்.

தற்போது மனைவி சுகமாக உள்ளார். பிள் ளையும் முதலில் போவதற்குப் பயப்பிட்ட இடத் துக்குச் செல்வதற்கு இப்போது பயப்பிடுவ தில்லை. கறுத்தப் பொக்கான் கதை கூறுவது மில்லை. சிறு பிள்ளைகள் வீட்டின் ஒரு பகு திக்குச் செல்லப் பயப்பிடுகிறார்கள் அல்லது மிரள்கிறார்கள் என்றால் அங்கு செய்வினை புதைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் திடமாக நம்பலாம்.

---

# சேலையில் கவர்ச்சி காட்டிய பிரீத்தி சிங்



கமல்காஸனின் இந்தியன் -2 படத்தில் நடித்து வருபவர் நடிகை ரகுல் பிரீத்தி சிங். அந்தப் படத்தின் படப்பிடிப்பு பாதியில் நிற்கும் நிலை யில் சிவகார்த்திகேயனுடன் அயலான் படத்தில் நடித்து வரகின்றார். தமிழ், தெலுங்கு, கிந்தி என பல மொழிகளிலும் கொடிநாட்டி வரும் பிரீத்தி சிங், தற்போது சேலையில் கவர்ச்சி சொட்டச் சொட்ட ஒரு ஒளிப்படத்தைத் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு ரசிகர்களைக் கிறங்கடித்துள்ளார்.

நடிகை ரகுல் ப்ரீத் சிங் கடைசியாக தமிழில் சூர்யாவின் நடிப்பில் வெளியான என்ஜிகே திரைப் படத்தில் நடித்திருந்தார். சாய்பல்லவி மற்றும் ரகுல் ப்ரீத் சிங் என இரண்டு கதாநாயகிகள் இதில் நடித்திருக்க ரகுல் ப்ரீத் சிங்கின் கதாபாத்திரம் சற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. அடுத்ததாக சிவகார்த்திகேயனுடன் ஜோடி போட்டு அயலான் திரைப்படத்தில் நடித்து வருகிறார். இன்று நேற்று நாளை பட இயக்குனர் ரவிக்குமார் இயக்கத்தில் அயலான் திரைப்படம் சயின்டிஃபிக் படமாக உருவாகி வருகிறது. படப் பிடிப்பு பணிகள் அனைத்தும் முடிந்து இப் பொழுது கிராபிக்ஸ் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது.





■ செந்தூரன்

அதிர்ச்சியூட்டும் பிரான்ஸ் அறிக்கை

# பாதிரியார்களின் பாலியல் குற்றங்கள்!

**பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகளில் 1950 முதல் 2020ஆம் ஆண்டு வரையில் மத குருமார்கள், சபை ஊழியர்களால் சுமார் 3.3 லட்சம் சிறார்கள் பாலியல் சீண்டல்கள், துன்புறுத் தல்களுக்கு ஆளாகியிருக் கின்றனர்**

ஒரு காலத்தில் கிழக்கில் நவீன நாகரிகத்தை பரப்பியவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையினர். அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளில் இருந்து இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு வந்த திருச்சபையினரே கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு போன்ற பல்வேறு துறைகளிலும் இன்றைய வளர்ச்சிக்கான அடித்தளத் தையிட்டு முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்கள். கிறிஸ்தவ தேவால யங்களினதும் அவற்றின் மதகுருக்களினதும் இன்றைய செல்வாக்குக்கு அடித்தளமிட்டிருப்பதும் இத்தகைய திருச்சபைகளின் அர்ப்பணிப்புமிக்க சேவைகளே.

அத்தகைய பெருமைக்குரிய திருச்சபைகளின் வரலாற்றுக் கறைகள் பல இப்போது அடுக்கடுக்காக வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அதி லும் குறிப்பாக திருச்சபைகள் மீதான பாலியல் முறைகேடுகள் பரவலாக வெளிவருகின்றன.

பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகளில் 1950 முதல் 2020ஆம் ஆண்டு வரையில் மத குருமார்கள், சபை ஊழியர்களால் சுமார் 3.3 லட்சம் சிறார்கள் பாலியல் சீண்டல்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்றும், குறிப்பாக ஆண் சிறுவர்கள் அதிகம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அதிர்ச்சி அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கிறது.

பிரெஞ்சு நிர்வாக அறிவியல் மையத்தின் தலைவரும், மாநில கவுன் சிலின் முன்னாள் தலைவருமான ஜீன்-மார்க் சாவ் தலைமையில் சுமார் இரண்டரை வருடங்களாக நடைபெற்ற இந்த 'சிறார் பாலியல் வதை' விசாரணையில், பிரான்ஸ் கத்தோலிக்க திருச்சபை மத குருக்கள், ஊழி யர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்ட சுமார் 6,500 பேரிடம் விசாரணை மேற்கொண்டு, அதில் கிடைக்கப்பெற்ற தரவுகள், பத்திரிகை செய்திக்குறிப்புகள் உள்ளிட்டவற்றைக்கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

70 ஆண்டுக்காலமாக, பிரான்ஸ் கத்தோலிக்க திருச்சபைகளில் அரங் கேறிய இந்தப் பாலியல் குற்றங்கள் தொகுக்கப்பட்டு, அசோசியேட் பிரஸ் செய்தி நிறுவனத்தால் நேற்று அறிக்கையாக வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த விசாரணை அறிக்கையில், `பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோ லிக்க திருச்சபைகளில் சிறார் களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிக அளவில் நடைபெற்றுவருவதாகவும், பாலியல் குற்றங்களைத் தடுக்க வேண்டிய திருச்சபை நிர்வாகம், குற்றம் புரிந்தவர் களுக்கு உறுதுணை யாக இருந்துகொண்டு, நீண்ட காலமாக அத்தகைய குற்றங்களை வெளியில் சொல்லாமல் மூடிமறைத்து வருவதாகவும் தொடர்ச்சியான குற்றச் சாட்டுகள் வந்து குவிந்தவண்ணமாக இருந்தன. பேரதிர்ச்சியை ஏற்படுத் திய இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து, முறையாக விசா ரித்து, உண்மையை வெளிக்கொண்டு வர முடிவு செய்தோம். அதன்படி, விசாரணைக்குழு ஒன்றை கை ஜீன்-மார்க் சாவ் தலை மையில் அமைத்தோம். முழுமையாக இரண்டரை ஆண்டுகளாக இந்த விவகாரத்தில் களப் பணியாற்றித் தரவுகளையும் தகவல் களையும் சேகரித்தோம். பிரான்ஸ் கத்தோலிக்க திருச்சபைகளில் 1950ஆம் ஆண்டு முதல் பதியப்பட்ட சிறார் பாலியல் குற்றங் கள் குறித்த விவரங்களை முழுமையாகச் சேகரித்தோம். அதற்கு, நீதிமன்றங்களிலும், காவல் நிலையங்களிலும் கத்தோ லிக்க சபைகள் குறித்துப் பதியப்பட்ட பாலியல் புகார்களின் தரவுகளையும் பயன்படுத்தினோம். அதன் அடிப்படையில், பாதிக்கப்பட்ட சுமார் 6,500 பேரிடம் தொலைபேசி வாயிலாக வும், நேரடியா கவும், விசாரணை மேற்கொண்டோம்.

குழுவின் விசாரணையில், கடந்த 70 ஆண்டுகளில் சுமார் 3.3 லட்சம் சிறுவர்கள், சபை ஊழியர்கள், மத குருமார்களால் பாலியல் துன்புறுத் தல்களுக்கு ஆளாகியிருப்பது தெரியவந்தது. இந்தப் பாலியல் குற் றங்களில் 2,900இலிருந்து சுமார் 3,200 பேர் ஈடுபட்டுள்ளனர். திருச்சபை ஊழியர்களில் தொடங்கி, மத குருமார்கள் வரை அனைவரும் இந்தக் குற்றச்செயல்களில்

(23ம் பக்கம் பார்க்க)

# ஒரேயொரு கேள்வி!

கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் அதி கமாக இருந்த காலத்தில் சாப்பாட்டுக் கடை களிலும் உணவகங்களிலும் ஒரு தடவை பயன்படுத்திவிட்டு எறியும் மட்டைக் கோப் பைகள், தட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இப்போது மீண்டும் கண்ணாடி அல் லது சில்வர் கோப்பைகள், பீங்கான்களை மீண் டும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். அவ ற்றை வெந்நீரிலும் கழுவுவதில்லை. இது தொற்று பரவல் அபாயத்தை அதிகரிக்குமா?

**தொற்றுநோய் சிகிச்சை சிறப்பு மருத்துவர் குமாரசாமியின் பதில்:**

``கொவிட் வைரஸ் தொற்றானது காற்று மற்றும் சுவாசத்துளிகள் மூலமே பரவுகிறது. தொற்று பாதித்த ஒரு நபர் தும்மும்போதோ, இருமும்போதோ அவர் வாயிலிருந்து வெளி யேறும் எச்சில் துளிகள் காற்றில் கலந்து, அதன் மூலம் மற்றவர்களுக்கும் அந்தத் தொற்று பர வும். எனவே கொவிட் நுண்தீமி தொற்றுள்ள ஒரு நபர் பயன்படுத்திய கோப்பை, தட்டு, ஸ்பூன் போன்றவற்றைச் சரியாகச் சுத்தம் செய்யாமல் மற்றவர்கள் உபயோகிக்கும்போது தொற்று பரவும் வாய்ப்புகள் அதிகம்.

அதனால்தான் கொரோனா தொற்றி தனி மைப் படுத்திக்கொண்டவர்களை அவர்கள் பயன் படுத்தும் பாத்திரங்கள் உள்ளிட்ட அனைத் தையும் மற்றவர் உபயோகிக்காதபடி தனியே வைத்திருக்கச் சொல்லி அறிவுறுத்தப்படுகிறார் கள். தொற்றுள்ள நபர்கள் பயன்படுத்தும் பொருள் களை முறையாகச் சுத்தம் செய்த பிறகே மற்ற வர்கள் உபயோகிக்கவேண்டும். குறிப்பாக, பாத்திரங்கள். முடிந்தவரை அவற்றை வெந் நீரில் கழுவிப் பயன்படுத்துவது சிறந்தது.

இந்த விதியானது வீடுகளுக்கு மட்டுமல்ல, விடுதிகள், சாலையோரக் கடைகள், உண வகங்கள், சாப்பாட்டுக் கடைகள் என எல்லா இடங் களுக்கும் பொருந்தும். எனவே, கொரோனா காலத்தில் நீங்கள் வெளியில் எந்த இடத்தில் உணவருந்தினாலும் தேநீர் அருந்தினாலும் குளிர்பானம் குடித்தாலும் அங்கே பயன்படுத் தப்படுகிற பாத்திரங்கள் முறையாகச் சுத்தம் செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத் திக்கொள்ளுங்கள். அப்படிச் செய்யாத பட் சத்தில் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. கூடியவரையில் ஒரு தடவை பயன் படுத்திவிட்ட எறியக்கூடிய மக்கக்கூடிய பொருள்களை இதுபோன்ற தருணங்களில் பயன்படுத்துவதே கூடுதல் பாதுகாப்பு.



# சிறைக்குள்...

சு.தர்மராசா

# அரசியல் கைதிகளை அடித்தும் கடித்தும் வழியனுப்புவது

25

சில கைதிகளுக்குச் சிறை வாழ்வில் நல்ல "வார்ட்", நல்ல சிறை அறைச் சூழல் என எல்லாம் வாய்த்திருந்தபோதும் படிப்பிலோ வேறு, கலைகளிலோ அவர்கள் ஆர்வம் செலுத்துவதில்லை. சிறைக்குள் கவலையும் துன்பமும் நிரந்தரமானவை. அந்தக் கால கட்டத்தையும் வாழ்க்கைக்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக்கொள்வது அவசியம். அதிக நேரத்தை மிச்சப்படுத்தக்கூடிய வாய்ப்புள்ள ஒரே இடம் சிறைச்சாலை மட்டுமே.

சில கைதிகள் தமது குடும்பச் சூழலில் ஏற்கனவே பழக்கப்பட்டுப்போன தூசனம் பேசுவது, மூத்தவர்களை மதிக்காமல் நீ, நான் என்று கதைப்பது, எதற்கெடுத்தாலும்

**தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடச் செல்வோர் வேறு பல பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்**

மற்றவர்களுடன் சண்டை பிடிப்பது, மற்றக் கைதிகளுக்குத் தொல்லை கொடுப்பது போன்ற பண்புகளுடன் இருப்பர். இந்தக் காரணங்களால் சக கைதிகளால் ஒதுக்கப்பட்டும் விடுகின்றனர். சிலரை எந்தச் சங்கத்திலும் வைத்திருக்க முடியாத சூழல் ஏற்படும் (உணவு, ஆடைகள், உணவுப் பாத்திரங்கள், சவர்க்காரம், தலைக்கு வைக்கும் எண்ணெய் ஆகியவற்றைச் சிறை நிர்வாகத்திடமிருந்து எடுப்பதற்குச் சிறைப் பிரிவுகளில் கைதிகளுக்கிடையில் சங்கமாகச் செயற்படும் முறை இருக்கிறது). இவ்வாறு மற்றவர்களுடன் இணைந்து செயற்படமுடியாதவர்கள் தனி அறைகளில் தங்கித் தனியாகச் சாப்பாடு எடுத்துச் சீவிக்கும் நிலை ஏற்படும். இதனால் அவருக்கும் அந்த வாட்டிலுள்ள ஏனைய கைதிகளுக்கும் தொடர்பில்லாது போய்விடும்.

மட்டக்களப்புச் சிறைச்சாலை "பி வார்ட்" என்பது ஒரு பெரிய அறை. மிகப் பழைய கட்டடம். அந்த அறை எப்போதுமே அழுக்காக இருக்கும். அரசியல் கைதிகளைத் தவிர புதிதாக வரும் ஏனைய கைதிகள் அனைவரும் முதல் நாள் இரவை அங்குதான் கழிக்க வேண்டும். மறுள் அலுவலகத்தில் அவர்களைப் பதிந்த பின்னர்தான் மற்றைய வார்ட்களுக்கு அனுப்புவார்கள். அவ்வாறு கொண்டுவந்து குவிக்கப்படுவோர் குளிக்காதவர்களாகவும், நோயளிகள், போதை தலைக்கேவறியவர்கள், புகைப்போர் எனப் பல வகையானவர்களாகவும் இருப்பர். இதனால் எந்நேரமும் அந்த இடம் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கும். சிலர் இலகுவில் அதற்குப் பழக்கப்பட்டு விடுவார்கள்.

அரசியல் கைதிகள் யாராவது விடுதலையாகும் நாள் தெரிந்தால் விடுதலையாகும்போது ஏனைய கைதிகள் அவருக்கு அடித்தும் கடித்தும் அனுப்புவார்கள். தோள் பட்டையில், முதுகில் தாக்கமாகக் கடித்து இதைத் தமது ஞாபகமாக வைத்துக்கொள் என்று செல்லமாகச் சொல்வார்கள். இதனால் காயம் வருவதுமுண்டு. இது ஒரு சந்தோசமான சித்திரவதை. அதை விடுதலையாகிப்போகும் சந்தோசத்தில் இருப்பவர்கள் கண்டுகொள்வதில்லை.

**சிறையில் கைதிகளைப் பார்வையிடுவது**

உறவுக்காரர் அல்லது நண்பர்கள் வந்து சிறையிலுள்ள கைதிகளைப் பார்வையிடுவது மிகவும் சிக்கலான விடயம். அதிலும் தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடச் செல்வோர் வேறு பல பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். ஓர் அரசியல் கைதியைப் பார்க்க வருபவர்கள் அவர்கள் வசிக்கின்ற நிர்வாக காவல் நிலையத்திற்குச் சென்று "இந்தக் குறிப்பிட்ட நபர் இந்த உறவுமுறையைக் கொண்டவரைப் பார்க்க அனுமதிப்பதில் எமக்கு ஆட்சேபனை எதுவும் .இல்லை" என்று உறுதிப்படுத்திய கடிதம் ஒன்றைப் பெற்று வந்து சிறை நிர்வாகத்திடம் அதைக் காட்டி அவர்களின் தரவுகள் எல்லாம் பதியப்பட்டுக் குற்றப் புலனாய்வுக் காவலர் முன்னிலையில் குறிப்பிட்ட கைதியுடன் ஆகக் கூடியது 15 நிமிட நேரம் கதைக்க அனுமதிக்கப்படுவார்.

இதில் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்துக்குள் வாழ்ந்த மக்கள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், அம்பாறை என படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமக்கு அருகிலுள்ள காவல் நிலையத்தில் கடிதம் பெற வேண்டியிருக்கும். இவ்வாறான கடிதங்களைப் பெறுவது மிகவும் சிரமமானதும் சங்கடமானதுமாகும்.

கைதிகளைப் பார்வையிட விரும்புவோரிடம் காவல்துறையினர் பல்வேறு விசாரணைகளை நடத்திய பின்பே கடிதம் கொடுப்பார்கள். கொழும்பு காவல் நிலையங்களில் இத்தகைய ஒரு கடிதத்தை வாங்குவதற்கு ஆயிரம் ரூபாவைத் தரகர் மூலம் வழங்கினால், அந்தக் கடிதத்தையும் தரகர் மூலம் வாங்க முடியும். சட்ட ரீதியாகக் கடிதத்தைப் பெற முயலும்போது அதைக் கால தாமதமாக்கித் தேவையில்லாமல் இழுத்தடிப்பார்கள். அதே வேளை ஆயிரம் ரூபா கொடுத்தால், "சிறையில் இருப்பவர் யார்? பார்க்கக் போவர் யார்?" என்ற கேள்விகளுக்கே இடமி ருக்காது. பொதுவாகக் கொழும்பில் இருக்கின்ற தமிழர்கள் வெளிநாட்டிலுள்ள தமது உறவினர்களுடன் தொடர்புள்ளவர்களாக இருப்பதால் அவர்களிடம் ஒரு மயில்தாளை (ஆயிரம் ரூபாத் தாளில் பச்சை நிற மயில் வடிவம் பொறித்திருப்பதால் அதை மயில் தாள் என அழைப்பது வழக்கம்) பெற்றால் தவறா? என்ற மனேபாவம் பல சிங்களக் காவலர்களிடம் உண்டு.

போகம்பரைச் சிறையில் கைதிகளை உறவினர்கள் சந்திக்க வருகின்ற குறிப்பிட்ட நேரத்தில் புலனாய்வு பொலிஸார் காவலர்கள் வருவதில்லை. இதனால் கைதிகளைப் பார்க்க வருபவர்கள் மாலை 5 மணிவரை காத்திருந்துவிட்டுப் பார்க்காமலே திரும்பிப் போவதுமுண்டு. என்னுடன் போகம்பரையில் இருந்த ஹட்டனைச் சேர்ந்த ஒரு கைதி கூறினார். தன்னைப் பார்ப்பதற்குத் தனது தந்தை வந்தபோது புலனாய்வுப் காவலர்கள் வராமல் "விசிற்" பார்க்க முடியாது என்று சிறை அதிகாரிகள் சொல்ல, அவர் தான் வந்த வாகனத்தைக் கொண்டு ஒரு புலனாய்வு அதிகாரிக்கு 500 ரூபா கொடுத்து அவரைத் தனது வாகனாத்தில் ஏற்றி வந்து தன்னைப் பார்வையிட்டார் என்று. பணம் கொடுத்து அந்தப் புலனாய்வு அதிகாரியை வாடகைக்கு அமர்த்தினார் என்பதுதான் இதன் உண்மை.

(தொடரும்)

● வேலணையூர் _ தாஸ்

# கவிதை எனும் தேனாறு

## கவிதை உருவாகும் நேரம்

12

கவிதை எந்த நேரத்தில் பிறக்கிறது, கவிதைக்கான மனநிலை என்ன? சில கவிஞர்கள் தொடராக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சில கவிஞர்கள் சிலவேளைகளில் எழுத ஒன்றும் தோன்றாது.படைப்பு மன நிலை இன்றி இருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்?

கவிதை என்பது ஒரு ஆள் மனதில் தோன்றும் சிந்தனையின் வெளிப்பாடு என்பதால் சிந்தனையில் ஏற்படும் மாற்றம் {மனநிலை }கவிதை உருவாவதை தீர்மானிக்கிறதா?

தமிழக கவிஞர் மௌனன் யாத்திரிகா தனது முகநூல் பக்கத்தில் கவிஞர் மனுஷ்ய புத்திரனை ஒரு பேட்டிக்காக கேட்டிருந்த கேள்வியையும் அதற்காக அவர் அளித்த பதிலையும் இங்கே பதிவிடுவது பொருத்தம் என நினைக்கிறேன்.

**கேள்வி:**

**படைப்பு மனநிலையை உதாசீனப்படுத்தாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது எத்தனைக் கவிதைகளை வேண்டுமானாலும் எழுதிவிட முடிகிறது. எழுதும் வேட்கை வரும்போது மனம் எங்கிருந்து பாடுபொருளை கொண்டு வருகிறது?**

**பதில்:**

எழுதும் வேட்கை என்ற ஒன்று தனியாக இல்லை. நம் இதயத்தின் ஆழத்தில் உறைந்த சொற்கள் மேலெழுந்து வருவதற்கு நாம் கொஞ்சம் இடமளிக்க வேண்டும். பல சமயங்களில் நம் மனம் அன்றாட வாழ்க்கையின் தட்டுமுட்டுச் சாமான்களால் நிரம்பி வழிகிறது. உங்கள் மனதில் நீங்கள் எப்போதும் ஒரு வெட்டவெளியை உருவாக்கிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் முழுநேர கவிஞனாக இருக்க முடியும்.

ஒரு புல்லின் நுனியில் படரும் பனித்துளியையோ, கண்களில் துளிர்க்கும் கண்ணீரையோ காண்பதற்கு இந்த வெட்டவெளி மிகவும் அவசியம். ஆனால், செய்திகளும் கேளிக்கைகளும் வருத்தங்களும் களைப்பும் எப்போதும் நம்மை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தால் பிறகு நாம் எழுதும் மனநிலைக்காக காத்துக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

பாடுபொருள்கள் எப்போதும் நம் அருகில் காற்றைப்போல நிரம்பி இருக்கின்றன. அதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. ஒரு மாயாஜாலக்காரன் தன் தலையிலிருந்து தொப்பியை எடுத்ததும் அதிலிருந்து புறாக்கள் வருவது போல, பாடுபொருள்கள் எங்கிருந்தோ வரும். முக்கியமான விஷயம் நீங்கள் ஒரு மேஜிஷியனா, இல்லையா என்பதுதான். ஆமாம், இத்தகைய படைப்பு மனநிலையைத் தக்க வைத்துக் கொண்டு பல கவிஞர்களின கவிதைகளை இணையவெளிகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்

**வி.மைக்கல் கொலின்**



திருகோணமலையை பிறப்பிடமாகவும் தற்போது மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் மைக்கல் கொலின் திருகோணமலையில் இருந்து வெளிவந்த தாகம் - கலை இலக்கிய சஞ்சிகையிலும் மட்டக்களப்பு தினக்கதிர் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பிலும் இருந்தவர்.

கடந்த ஏழு வருடங்களாக மட்டக்களப்பிலிருந்து மகுடம் என்ற கலை இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார். சிறுகதை கவிதை என சஞ்சிகைகளிலும் இணையதளங்களிலும் எழுதுகின்ற மைக்கல் கொலின், தொன்மங்களை மீள் வாசிப்பு செய்கின்ற கதைகளை பரசுராம பூமி என்கிற தனது தொகுதியில் எழுதியிருந்தார்.

அதேபோல் அண்மையில் முகநூலில் அவர் எழுதிய கவிதை ஒன்று இயேசுநாதருடைய சிலுவை மரணத்தை மறுவாசிப்பு செய்து செய்கிறது. அந்த கவிதை செம்மண் வாசகர்களுக்காக.

*தேவாலய பீடத்தின்*
*உச்சியில்*
*சிலுவையில் தொங்கிய இயேசு*
*ஆணிகள் கழன்று விழ*
*கீழே இறங்கி வந்தார்.*
*எத்தனை காலம்தான்*
*அவர்*
*பிறப்பதும்*
*இறப்பதும்*
*உயிர்ப்பதும்?*
*சலிப்பின் ரேகைகள் முகத்தில் பரவ*
*ஆலய வாசலுக்கு வந்தவரை*
*தடுத்து நிறுத்தியது*
*பிசாசு.*
*"தேவ மைந்தனே*
*எங்கே போகிறீர்"?*
*என்ற அலகையிடம்*
*"சாத்தானே உன் அழிவில் இருந்து என் மக்களை காப்பாற்ற வேண்டும்" என்றார் மெசியா.*
*"கடவுளின் மகனே*
*மக்களிடம் இருந்து தப்பிக்கவே நான் ஆலயத்தில் சரண் புகுந்தேன்*
*இப்போதெல்லாம்*
*மனிதர்கள் எங்களைக் கண்டலல்ல*
*நாங்களே அவர்களைப் பார்த்து*
*பயங் கொள்கிறோம்.*
*நாங்கள் அவர்களை அழிக்கத் தேவையில்லை*
*அவர்கள்*
*தங்களைத் தாங்களே*
*பிரித்துக் கொள்கிறார்கள்*
*அடித்துக் கொள்கிறார்கள்*
*அழித்துக் கொள்கிறார்கள்.*
*ஆயுதங்கள் மட்டுமல்ல*
*இப்போது அவர்கள்*
*படைத்த கிருமிகளே*
*அவர்களை அழித்து வருகிறது*
*ஆனாலும் அவர்கள்*
*திருந்துவதாயில்லை.*
*ஆலயங்கள் பூட்டு*
*கோயில்கள் பூட்டு*
*சகல மத பீடங்களும் பூட்டு*
*பாடசாலைகள் இல்லை*
*அலுவலகங்கள் இயங்கவில்லை*
*வைத்தியசாலைகள் மட்டுமே*
*நிரம்பி வழிகின்றன*
*மரணங்களால்*
*மரங்களை விட*
*கீழானவர்களாய்*
*மாறிப்போன*
*மனிதர்களால்.*
*உமது கையில்*
*முகக் கவசமுமில்லை*
*ஊசி போட்ட அட்டையுமில்லை*
*அதனால் தேவனே*
*நீர் வெளியேறுவது*
*உமக்கு பாதுகாப்பில்லை.*
*மீண்டும்*
*ஏறும் சிலுவையில்*
*ஆணிகளின் பிடியில்*
*நீர் தொங்குவதே*
*சிறப்பு*
*உம்மிடம்*
*ஓர் விண்ணப்பம்*
*நீர் மீண்டும்*
*சிலுவை சுமக்க வேண்டும்*
*மனிதர்களிடம் இருந்து*
*எம்மைக் காப்பாற்ற"*
*சாத்தானின் பேச்சில் சத்தியம் இருந்ததை உணர்ந்தார்*
*இயேசு.*
*சிலுவையில் இருந்து*
*கழன்று விழுந்த*
*ஆணிகளை மீண்டும்*
*தேடத் தொடங்கினார்.*

முன்பைவிட இப்பொழுது கவிதை சார்ந்து பல பெண்கள் இணையத்தில் எழுதுகிறார்கள். அவர்களில் ஒருவர் சம்மாந்துறையை சேர்ந்த நுஹா இணையத்திலும் சஞ்சிகைகளிலும் கவிதை சிறுகதை பத்தி எழுத்துக்களை எழுதுகிற நுஹா அழகிய சொல்லாடல் படிமங்கள் நிரம்பிய கவிதைகளை எழுதுகிறார். இவர் முகநூலில் எழுதிய இயற்கையின் செழுமையை சொல்கிற ஒரு கவிதை.

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## வானொலியில் பேசுவதில் சுத்துமாத்து

■ கண்ணதாசன் - பருத்தித்துறை ■

நீண்ட காலத்துக்கு முன்னர் இலங்கை வானொலியில் நேயர் விருப்பம் என்றொரு நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது. பாடல் கேட்க விரும்புபவர்களின் பெயர்களையும், விரும்பும் பாடலையும் தபாலட்டையில் எழுதி அனுப்பினால் அதை அந்த நிகழ்ச்சியில் சேர்த்து வாசித்துக் கொள்வார்கள். பாடலை விரும்பிக் கேட்பவர்களாகக் கிராமத்திலுள்ள மிக மோசமானவர்களின் பெயர்களைத் தபாலட்டையில் எழுதி அவர்கள் விரும்பிக் கேட்கும் பாடல் என்று ''நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள் '' என்பது போன்ற பாடல்களைக் குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சிக்குச் சிலர் அனுப்பி வைப்பார்கள். அது வானொலியில் ஒலிபரப்பான பின்புதான் தெரியும் அது வேண்டுமென்றே ''ஊர்ப் பெடியள்'' சிலரால் எழுதிப் போடப்பட்டது என்று. இதை வானொலித் தரப்பினர், அறிவிப்பாளர்கள் அறிந்துகொள்வதில்லை.

கொரோனா முடக்கம் நடைமுறையிலிருந்த காலத்தில் இதுபோன்ற பல சம்பவங்கள் நடந்தன. அதைவிட மேலதிகமாக இலங்கையிலுள்ள வசந்தம், சூரியன், சக்தி, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் எனப் பலவித வானொலிகளிலும் தொலைபேசியூடாகப் பாட்டுக் கேட்பதுபோல அழைப்பை ஏற்படுத்தினார்கள். பணிபுரிகின்ற இடங்களில் இருந்தவாறு குறிப்பிட்ட அலைவரிசையில் போகும் பாடலை விரும்பிக் கேட்பதாகக் கூறித் தமது வியாபார நிலையம் திறந்திருக்கிறது, நாங்கள் எல்லோரும் அங்குதான் நிற்கிறோம் என்பதைச் சூசகமாகத் தெரிவித்தார்கள். பொருள்கள் தேவைப்படுவோர் கடைக்குப் பின்னால் வந்து வாங்கலாம் என்பதையும் விளம்பரச் செலவின்றி நுட்பமாகத் தெரியப்படுத்தினர்.

இதில் சில வர்த்தகர்கள் மிகவும் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். ''ஹலோ எங்கிருந்து பேசுறிங்க...? பொது முடக்கத்தில் என்ன செய்கிறீர்கள்...?'' போன்ற வானொலிக்காரரின் உரையாடலுக்கிடையில் குறிப்பிட்ட கடையில் பணி புரிபவர்கள் கடையில்தான் நிற்கிறார்கள் அங்கு போனால் பொருள்களை வாங்கலாம் என்ற செய்தியை வானொலி கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குச் சென்று சேர வைத்தனர்.

''நாங்கள் கடையைப் பூட்டிவிட்டுப் பின்பக்கமாக இருந்து வானொலியின் பாடல்களைச் சத்தமாகக் கேட்டு ரசித்துக்கொண்டிருக்கிறோம்'' என்று கூறுவதன் மூலம் மக்களை அங்கு அழைத்தனர். இந்த நுட்பமான உரையாடல் வனொலி நிலையத்தில் இருப்பவர்களுக்குப் புரிவதில்லை. கதைத்து முடிக்கும்போது, ''நீங்கள் போடுகிற பாடல் நல்ல இருக்கக்கா... நல்ல இருக்குதண்ணா'' என்று கனிவாகப் பேசி ஏதாவது ஒரு நல்ல பாட்டுப் போடுங்கா என்று தந்திரமாக முடித்து விடுகின்றனர்.



இதன் மூலம் சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் பொது முடக்கம் மிக இலகுவாக முறியடிக்கப்படுவதுடன் நோய்த் தொற்றையும் ஏற்படுத்தி விடுகிறது.

நேர்மையாக உள்ள சில வியாபாரிகள் தமது கடைகளை முடக்க காலத்தில் நிரந்தரமாகப் பூட்டி வைத்திருந்த நிலையில் ஒரு சிலர் மட்டும் அதிகம் சம்பாதித்ததும் நடந்தது. ''முடக்க காலத்தில் ஏன் கடையில் நிற்கிறீர்கள்...?'' என்ற கேள்வியை வானொலிக்காரர்கள் அவர்களிடம் கேட்காதது இதில் பெரும் குறைபாடாகும்.

## முன்பெல்லாம்

முன்பெல்லாம்
கலகலத்த முகத்துடன்
நாட்களை கடந்திருப்போம்!

முன்பெல்லாம்
நல்ல நண்பர்களுடன்
நிமிடங்களை பகிர்ந்திருப்போம்!

முன்பெல்லாம்
அவனைப் பற்றியோ
இவளைப் பற்றியோ
புரளி பேசி இருக்க மாட்டோம்!

முன்பெல்லாம்
கண்ணீர்த்துளிகளை
வீணாக சிந்தியிருக்க மாட்டோம்!

முன்பெல்லாம்
நிலவைப் போல்
இரவைப் போல்
சுதந்திரமாக திரிந்திருப்போம்!

இவைபோல்
முன்பெல்லாம்
என்றொரு காலம்
எல்லோருக்கும் இருந்திருக்கும்!

ஆனால்
முன்பெல்லாம்
இப்போது ஆகிவிட முடியாதே!

**அஷ்வினி வையந்தி**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

## செத்தல் ...

காரத்தை வழங்கும் செத்தல் மிளகாயின் இறக்குமதியை நிறுத்துவதற்கு முன்பு மிளகாய் செய்கையில் ஆர்வத்தினை தூண்டும் முயற்சிகளை நடைமுறைக்கிட்டு தற்போது 15 வீதத்தில் உள்ள உள்நாட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை அதிலிருந்து முன்நோக்கி நகர்த்தவேண்டும். பின்னர்-அதிலும் நம்பிக்கையான முன்னேற்றம் தெரிந்த பின்னே, இறக்குமதிக்கு கடிவாளமிட தொடங்க வேண்டும். அவ்வாறில்லையேல், மஞ்சளுக்கு அடுத்த படியாக மிளகாயும் உணவுத்தட்டிலிருந்து ஒளியத்தொடங்கும். இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு கடற்கரையோர பிரதேசங்களை உறைப்பான பிரதேசங்களாக மாற்றவும் அது வழிவகுக்கும்.

## கவிதை எனும்...

உதிராத மலர்கள் முகம் பார்த்து கதை பேசும்
ஈரவலயப் பெருங்காடு

நத்தையின் முதுகில் சில்வண்டின் இறகுகளில்
பல்வேக நர்த்தன சூரியன்கள் மறையாத
உதயங்களை நிறம்பிரித்து தோகைவரைய
தகதகக்கும் மயிலாக அங்கே சிலிர்த்து நிற்கிறேன்

நகர்ந்தலையும் பச்சைக் கொடிகளின் இளம் படர்வில்
வெற்றிலைத் தளிர்க் கரங்கள் எனதாகின

நீராழப் பெருஞ்சுனையில் சுழித்தோடும் தங்கமீன்
மலைகளை மோதி வெடிக்கவைத்தபடியும்
தாழைப்புதரை விலத்தியபடியும்
நீரேணியில் தாய்வீடுதேடித் துள்ளி ஏறும்
சேமன் வாலில் என் பாதணி வழுவாமலுள்ளது

எப்போதும் பிணைந்துகிடக்கும் பச்சை வாசனையில்
விடாது பொழிந்தவண்ணமிருக்கும் பனிப் பூக்களில் பால்யம்
எனும் இன்னிசை
நிறைந்து கிடக்கும்
முடிவுறாத இன்னிசை

…………………………………………………….

இருதுருவங்களின் நீட்சியான சந்ததிகளின்
அடர் இருத்தலில் மேகங்களின் கருமை
ஏக்கப்பார்வைகளை தாங்கிமிதக்கிறது
வறண்ட உதடுகளை ஒருமழைத்துளி நனைக்கலாம்
அது இன்றல்லாவிடில் நாளை நிகழலாம்
நகருயிர் மேனியென மேற்பரப்பு ஊர்ந்துகொண்டிருக்கிறது
சாம்பல் பொருக்கின்பிளவுகளில் கனிவின் பானம் பசிய தளிர்களை
பிரசவிக்கவேண்டியே
தினமும் அந்த ஜோதி உதித்து மறைகிறது
மாறாக ஒரு பாசிப்படுகையாயினும்
உதித்தலின் விழிகள் என்று மலரக்கூடும்

வரும்

# ஓர் அகதிக்கு நோபல் பரிசு!

இலக்கியத்துக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு தன்சானியாவைச் சேர்ந்த அகதி ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்துல் ரசாக் குர்னா என்பது அவரது பெயர். அகதிகளின் தலைவிதி குறித்தும் குடியேற்றத்துவத்தின் (கொலனிசம்-காலனித்துவம்) விளைவுகள் குறித்தும் சமரசமற்ற விதத்தில் எழுதியதுடன் அவற்றுக்குள் இரக்கமற்ற விதத்தில் ஊடுருவலை நிகழ்த்தியவர் என்கிற வகையில் அவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுவதாக சுவீடனில் உள்ள நோபல் பரிசுக் குழு வியாழக்கிழமை அறிவித்தது.


தன்சானியா நாட்டிலிருந்து அகதியாகப் புலம் பெயர்ந்து வந்து பிரிட்டனில் வசிக்கிறார் 72 வயதான குர்னா. ஆங்கிலத்தில் தனது படைப்புக்களை உருவாக்குகின்றார். இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறும் இரண்டாவது ஆபிரிக்க எழுத்தாளர் இவர். இதற்கு முன்னர் நைஜீரியாவைச் சேர்ந்தவரான வோல் சொயின்கா நோபல் பரிசை வெற்ற முதல் ஆபிரிக்கராகியிருந்தார்.

குர்னாவின் "பரடைஸ்" என்கிற நாவல் இரண்டாம் உலகப் போர்க்கால குடியேற்றத்துவ கிழக்கு ஆபிரிக்காவைப் பற்றிப் பேசியது. புக்கர் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலிலும் இடம்பெற்றிருந்தது.

இங்கிலாந்திலோ அல்லது ஆப்பிரிக்க கண்டத்திலோ உள்ள குர்னாவின் கதாபாத்திரங்கள் பண்பாடுகள் மற்றும் கண்டங்களுக்கிடையில், விட்டுச் செல்லப்பட்ட வாழ்க்கைக்கும் வரவிருக்கும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள இடைவெளியில் தங்களைக் காண்கின்றன என்கிறார் நோபல் பரிசுக்கான நிறுவனத்தின் தலைவர் ஆன்டர்ஸ் ஓல்ஸன்.

தனக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருப்பது முற்றிலும் ஆச்சரியமான விடயம் என்று குர்னா தெரிவித்திருக்கிறார். தன்னுடைய இந்தப் பரிசை ஆபிரிக்காவுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் தன்னுடைய ரசிகர்களுக்கும் தான் அர்ப்பணிக்கின்றேன் என்றும் அவர் உருகியுள்ளார்.

1960ஆம் ஆண்டு அவர் ஓர் அகதியாகத் தன்சானியாவை விட்டுப் புறப்பட்டு பிரிட்டனை வந்தடைந்தார்.



# மருத்துவம்



## எந்நாளும் நலம் வாழ

### படுக்கைப்புண் - Bedsores

மருத்துவர் கந்தையா -சோதிதாசன்



வயோதிபர்கள் அல்லது முதுகெலும்பு நோயினால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்ச்சியாக நீண்ட நேரம் படுக்கையில் இருக்கும்போது அல்லது அசைவில்லாமல், சுயநினைவில்லாமல் அல்லது வலியை உணர முடியாமல் போகும்போது அவர்களுக்கு படுக்கைபுண்கள் ஏற்படலாம்.


படுக்கையில் படுத்துக்கொள்வது, சக்க ர நாற்காலியில் அமர்ந்து கொள்வது அல்லது நீண்ட நேரம் காலுறைகள் அல்லது பட்டிகள் போன்றவற்றை அணிவதாலும் இத்தகைய புண்கள் ஏற்படலாம்.

பலவீனமான வயதானவர்களிடையே இது ஒரு கடுமையான பிரச்சினையாக இருக்கலாம்.

அவை அந்த நபர் பெறுகின்ற பராமரிப்பு தரத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம். அசைவற்ற அல்லது படுக்கையில் கிடந்த நபர் திரும்பவில்லை என்றால், சரி யாக அவரது படுக்கை நிலையை மாற்றி, நல்ல ஊட்டச்சத்து மற்றும் தோல் பராமரிப்பு கொடுக்கப் பட வேண்டும்,

நீரிழிவு, குருதி ஓட்டம் மற்றும் ஊட்டச் சத்து குறைபாடு உள்ளவர்களுக்கு இதனால் அதிக ஆபத்து ஏற்படுகிறது.

2 முதல் 3 மணி நேரத்திற்கும் மேலாக சருமத்திற்கு குருதி வழங்கல் துண்டிக்கப்படும்போது படுக்கைபுண் உருவாகிறது.




தோல் இறந்தவுடன், படுக்கைப் புண் முதலில் சிவப்பு, வலிமிகுந்த பகுதியாகத் தொடங்குகிறது, அது இறுதியில் ஊதா நிறமாக மாறும். சிகிச்சையளிக்கப்படாவிட்டால், தோல் உடைந்து அந்தப் பகுதி கிருமித் தொற்றுக்கு உள்ளாகலாம் .

ஆழமாக மாறும் படுக்கை புண்கள் எலும்பு வரை தொற்றினை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. படுக்கைப் புண்ணின் தீவிரம், நபரின் உடல் நிலை மற்றும் பிற நோய்கள் (நீரிழிவு போன்றவை) ஆகியவற்றைப் பொறுத்து இவை குணமடைய நாட்கள், மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட ஆகலாம்.

குணப்படுத்தும் செயல்முறைக்கு சிலவேளைகளில் அவர்களுக்கு அறுவை சிகிச்சை கூடத் தேவைப்படலாம். படுக்கை புண்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கலாம்.?

பாதிக்கப்பட்ட பகுதியில் மேலும் அழுத்தம் உராய்வு ஏற்படாமல் பாதுகாத்தல். காயத்தை சுத்தமாக வைத்திருத்தல். நல்ல ஊட்டச்சத்தை உறுதி செய்தல். சேதமடைந்த, பாதிக்கப்பட்ட அல்லது இறந்த திசுக்களை நீக்குதல். மேலும் அவர்களுடைய வாழ்க்கை முறையில் மாற்றங்களைச் செய்யலாம்.

உடல் எடையை குறைத்தல், குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்துதல்,மற்றும் புகைப்பிடிப்பதை நிறுத்துதல் ஆகியவை குணப்படுத்தும் செயல்முறைக்கு உதவக்கூடும்.

குருதி ஓட்டத்தை மேம்படுத்த உதவும் இலகுவான உடற்பயிற்சியையும் வழங்கலாம்.

**சித்த மருத்துவம் இதற்கான சில சிகிச்சைகளைச் செய்கிறது**

* ஆடு தின்னா பாலை" என்று ஒரு மூலிகை இருக்கிறது அதையும் கருஞ்சீரகத்தையும், தேங்காய் எண்ணெய்யில் போட்டுக் காய்ச்சிக் கொள்ளவேண்டும்.. இதை புண்களில் பூசலாம்.

* குப்பைமேனி இலையுடன் சிறிது வேப்ப எண்ணெய் கலந்து அரைத்து புண்களில் பூசிவர படுக்கைப்புண் நீங்கும் .

* படுக்கை புண்களுக்கு எதிரான ஒரு அற்புதமான வீட்டு நிவாரண பொருளாகிறது மஞ்சள். பாதிக்க பட்ட இடத்தில் உப்பு நீரால் கழுவி விட்டு, மஞ்சள் பூசிவரலாம்.

* புண்களை சுத்தம் செய்வதற்கு திரிபலா கசாயத்தையும் பயன்படுத்தலாம்

* பச்சை எண்ணெய், கரப்பான் தைலம், குப்பைமேனி தைலம். கந்தக இரசாயனம் போன்ற மருந்துகளும் பயன ளிக்கின்றன.

## புலித்தேவன்...






அந்தச் சூழலில் நேராகப் பார்க்கும்போது மக்களின் தற்காலிகக் கொட்டகைகள் தெரிந்தன. புலிகளின் பக்கம் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் மக்கள் இருக்கக்கூடும் என நினைத்தேன். மாலை 3 மணியளவில் அந்த மக்கள் நாமிருந்த பகுதியை நோக்கி வந்தார்கள். அப்போதும் புலிகள் எமது காவலரண் பக்கம் சுட்டுக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு முதலில் வந்த மக்களில் சிங்களம் தெரிந்த சிலர் "புலிகள் சிறிய துப்பாக்கிகளுடன் மக்களுக்குள் வருகிறார்கள் உங்களைச் சுடுவார்கள்" என்று கூறிச் சென்றார்கள். நாங்கள் அதை எதிர்பார்த்திருந்தோம்.

பல மக்கள் எங்களைக் கும்பிட்டுவிட்டு படையினரின் பகுதிக்குள் சென்றார்கள். மக்களுடன் மக்களாக வந்த இரண்டு கடற்படை அதிகாரிகள் இறுதிவரை புலிகளின் சிறையில் இருந்திருக்கிறார்கள். பின்னர் அவர்களைத் திறந்துவிட்டதால் அவர்கள் தாங்கள் யாரென்று மக்களுக்குத் தெரிவிக்காமல் நடந்து வந்தார்கள். என்னைக் கண்டதும் இருவரும் தங்களை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களைப் பின்னரங்கில் நின்ற எமது படை அதிகாரி ஒருவரிடம் அனுப்பி வைத்தேன். அன்றிரவு 7 மணி வரை மக்களை உள்ளே எடுத்தோம்.

பின்னர் நாங்கள் புலிகளால் தாக்கப்படக்கூடும் என்பதால் எமது அரணுக்கு அண்மையில் நின்ற மக்களை அந்த இடத்திலேயே இருக்குமாறு கூறினேன். மறுநாள் காலையில் உள்ளே எடுப்பதாகக்கூறிவிட்டு நாங்கள் பாதுகாப்பான பதுங்கிடம் ஒன்றுக்குள் இரவைக் கழித்தோம்.

18ஆம் திகதி முழு நாளும் மக்களை உள்ளே எடுத்தோம். மக்களைப் பயமில்லாமல் வருமாறு ஒலிபெருக்கியில் அறிவித்துக்கொண்டிருந்தோம். பல ஆண், பெண் புலிகள் தமது புலிச் சீருடைகளைக் கழற்றிவிட்டு வேறு சாதாரண உடைகளை அணிவதைக் கண்டேன். (தொலைநோக்கியூடாக) எனினும் அவர்கள் எமது அரணுக்கு அருகில் வந்தபோதும் அவர்களை ஒன்றும் செய்யாது மக்களுடன் அனுப்பினோம்.

என்னைப் புலிகள் இலக்கு வைக்கக்கூடும் என நினைத்த என்னுடன் நின்ற சிப்பாய் ஒருவர் என்னைக் கதிரையில் இருக்குமாறு கூறிவிட்டு நான் நின்ற இடத்தில் அவர் நின்றவாறு மக்களை அவதானித்தார். அப்போது அவருக்கு (கோப்ரல் அசங்க) நெஞ்சிலும் கையிலும் புலிகள் சுட்டனர். உடனே அவரைப் பின்தளத்துக்கு அனுப்பி வைத்தேன். உண்மையில் அந்தச் சூடு எனக்கு விழுந்திருக்க வேண்டியது.

18ஆம் திகதி காலையில் காயப்பட்ட புலி உறுப்பினர் ஒருவர் மனைவி பிள்ளைகளுடன் இருந்தார். அவர்களுக்கு அன்று காலையில் எனக்குக் கிடைத்த காலை உணவான பாணைக் கொடுத்தேன். காயப்பட்டவரின் மனைவி முதலில் காயப்பட்டவருக்கு அதை ஊட்டி விட்டார். அன்று மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட காயப்பட்டவர்களை எமது டிரக்ரர்களில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம்.

### புலிகள் வந்தபோது தாக்குதல்

மக்களுடன் சேர்ந்து வராமல் சுமார் 60-70 பேர் வரையிலான புலி உறுப்பினர்கள் கடல் தாவரங்களை விலக்கிக் கொண்டு களத்தில் இறங்கி எமது பக்கம் வருவதை அவதானித்தேன். புலிகளின் அணி ஒன்று எம்மைத் தாக்க வருவதை உணர முடிந்தது. நான் எனது அணியினரிடம் கூறினேன். எல்லோரும் பாதுகாப்பாக நிலையெடுத்துக்கொள்ளுங்கள் அவர்கள் தாக்க வருகிறார்கள். அவர்கள் நெருங்கி வந்த பின்னரே தாக்குதலைத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் தப்பி ஓடிவிடுவார்கள் - என்று சொன்னேன்.

அந்த அணி எமக்கு அருகாக வந்ததும் தாக்குதலை தொடங்கினோம் அதில் 60 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர் (அங்கிருந்து வந்தவர்கள் தாக்கியதாகவோ, படையினர் தாக்கியபோது திருப்பித் தாக்கியதாகவோ - தெரிவிக்கவில்லை. வெள்ளைக் கொடியுடன் வந்தார்கள் என்றும் குறிப்பிடவில்லை).

பின்னர் தேடிப்பார்த்தபோது அதில் புலித்தேவன், நடேசன் ஆகியோரும் அடங்கியிருந்ததை அறிந்தோம். நடேசனின் பாக்கில் இருந்து காசோலைப் புத்தகங்கள், ஒரு வானொலிப் பெட்டி என எடுத்தோம். அந்த வானொலிப் பெட்டியை எமது படைத்துறை அலுவலகப் பகுதியில் ஒரு நினைவுச் சின்னமாகப் பத்திரப்படுத்தினோம். புலிகள் வீசிச் சென்ற பல ஆயுதங்களை எடுத்தோம். அவற்றில் பல இலங்கை படையினரிடமே இல்லாத ஆயுதங்களாகும். 19ஆம் திகதி பிரபாகரன் மற்றும் பலரின் உடலங்கள் கிடைத்ததாக அறிந்தேன்.

30 வருட கொடூரப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தக் கால கட்டத்தில் வாழ்ந்ததற்காக நான் பெருமைப்படுகிறேன் - என்று அவர் அந்தச் செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

## இந்த வார சுடோக்கு - 56

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 5 | | | 1 | | | |
| 4 | | 3 | 9 | | | | 5 | |
| | 8 | | 7 | 5 | | | | |
| | 5 | 1 | | | | | | 3 |
| 8 | 4 | | | | | | 7 | 6 |
| 6 | | | | | | 1 | 8 | |
| | | | | 9 | 6 | | 1 | |
| | 9 | | | | 3 | 8 | | 7 |
| | | | 1 | | | 5 | | 9 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
*551 A, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 4 | 2 | 7 | 8 | 6 | 9 | 3 |
| 2 | 3 | 7 | 6 | 9 | 1 | 4 | 8 | 5 |
| 9 | 8 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 7 |
| 4 | 6 | 3 | 8 | 1 | 9 | 5 | 7 | 2 |
| 1 | 2 | 9 | 7 | 6 | 5 | 8 | 3 | 4 |
| 8 | 7 | 5 | 4 | 3 | 2 | 9 | 6 | 1 |
| 6 | 4 | 8 | 1 | 2 | 7 | 3 | 5 | 9 |
| 3 | 5 | 1 | 9 | 8 | 4 | 7 | 2 | 6 |
| 7 | 9 | 2 | 3 | 5 | 6 | 1 | 4 | 8 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

## பாதிரியார்களின்...

ஈடுபட்டிருப்பது அம்பலமாகியிருக்கிறது. இதில், அதிர்ச்சிகரமான தகவல் என்ன வென்றால், பாலியல் குற்றங்கள் புரிந்தவர்களில் மூன்றில் 2 பங்கு பேர் கத்தோலிக்க மத குருக்கள் என்பதுதான்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வெளியாகி உலக அளவில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், இந்த அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைகளில் பாலியல் சீண்டல்களுக்கு ஆளானவர்கள் வரவேற்றுள்ளனர். இது தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான அமைப்பினர் கூறுகையில், இத்தனை ஆண்டுகளாக மூடிமறைக்கப்பட்ட உண்மை தற்போது, வெளிக்கொண்டு வரப்பட்டிருப்பதால் நீதி நிலைநாட்டப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வத்திக்கான் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், `பிரான்ஸ் கத்தோலிக்க திருச்சபைகளில் நடைபெற்றுள்ள பாலியல் குற்றங்கள் குறித்து போப் ஃபிரான்சிஸ் வேதனை தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்த தகவல்களைக் கண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர் மனம் வருந்தினார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

போப்பாண்டவர் மனம்வருந்துவதும் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பிரார்த்திப்பதும் மட்டுமே இதற்குத் தீர்வாகிவிடாது. குற்றமிழைத்தவர்கள் முறையான குற்றவியல் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதும், இத்தகைய பாலியல் குற்றங்களுக்குத் தூண்டுதலாக இருக்கும் கத்தோலிக்க மதகுருமார்கள் திருமணம் செய்யக்கூடாது என்கிற நெறிமுறையை மீளாய்வுக்கு உட்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முயற்சிப்பதும் முக்கியம்.

# சிங்களவர்களால் நிரம்பியுள்ள கிளி. மருத்துவமனை

| நிறஞ்சன்

கிளிநொச்சி மருத்துவமனையில் மருத்துவர்கள், தாதிமார், ஏனைய ஊழியர்கள் என அங்கிருக்கின்ற 65 சத வீதமான ஊழியர்கள் சிங்களவர்களாக இருக்கின்றனர். 100 சதவீதம் தமிழர்கள் வாழும் கிளிநொச்சியில் இவ்வாறு சிங்கள ஊழியர்களால் அந்த மருத்துவமனை நிரம்பியிருப்பதால் நோயாளர்கள் மொழிப் பிரச்சினையால் சிரமப்படுகின்றனர். தமிழ்ப் பிரதேச அலுவலகங்கள் சிங்களவர்களால் இவ்வாறு நிரப்பப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நாடாளுமன்றத்தில் காட்டமான உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார்.

**தமிழ்த் தேசியவாதிகள் கவனம் கொள்ள வேண்டும்**

வடக்கு மாகாணத்தில் வருடா வருடம் கணிசமான தமிழ் மருத்துவர்கள் பல்கலைப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறுகின்றனர். ஆனபோதிலும் அவர்கள் யாருமே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்ற விரும்புவதில்லை. தீவுப் பகுதிகளில் பணியாற்றக்கூட விரும்புவதில்லை. அவ்வாறு பணியாற்றும் ஒரு சிலரும் அதைப் பெரும் சாதனையாகவே குறிப்பிடுகிறார்கள். அதிலும் குறிப்பாக அக்கராயன், பூநகரி போன்ற பகுதிகளை அறவே விரும்புவதில்லை. இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் சிங்கள மருத்துவர்களும், சிங்கள ஊழியர்களும் சென்று சேவை புரிகின்றனர்.

போர் முடிவுற்ற பின் தாதியர் பயிற்சிக்காகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மாத்திரம் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்பட்டது. ஆனபோதும் யாருமே அதற்கு முன்வரவில்லை. இதைவிட ஜேர்மன் ரெக் போன்ற தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில்கூட கிளிநொச்சி மாணவர்கள் இணைந்து கல்வி கற்காத நிலையே இருக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் இருந்து கிளிநொச்சிக்கு வந்து முஸ்லிம் மாணவர்கள் அதிகளவில் இங்கு கல்வி கற்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் நிலையும் இது தான். வடமாகாண சபை இயங்கிய காலத்திலும் இதுவிடயத்தில் மக்கள் மயப்பட்ட வேலைத்திட்டம் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.




இது விடயத்தில் தமிழர் மத்தியில் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். அதற்கான முன்னெடுப்புகளைத் தமிழ் அரசியல்வாதிகளும் கல்விமான்களும் முன்வைப்பதே சரியானது. ஆனால் இந்த அரசியல்வாதிகளிடமோ, கல்விமான்களிடமோ இது சார்ந்த தரவுகள் எவையும் சேகரிக்கப்படாதது மிகப் பெரிய குறைபாடாகும்.

**கிளிநொச்சி மாவட்ட உறுப்பினரின் கடப்பாடு**

போர் முடிவுற்றதும் 2010இலிருந்து கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் சிறீதரன். 2010, 2015 தேர்தல்களில் வெற்றி பெற்றதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இவற்றை அவர் ஒழுங்குபடுத்தியிருக்கவேண்டும். அதிலும் 2015-2019 நல்லாட்சிக் காலத்தில் இவற்றை நன்றாகவே ஒழுங்கு செய்திருக்க முடியும். 2020 தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டபோதும் கிளிநொச்சி மாவட்ட மக்களே அவரை வெல்ல வைத்தார்கள். எனவே கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு அனைத்தையும் செய்து கொடுக்கவேண்டிய கடப்பாடு சிறீதரனுக்கே உண்டு.

இவ்வாறானதொரு விடயத்தை நாடாளுமன்றத்தில் பேசும் அளவுக்குத் தமிழ்த் தேசியவாதிகளோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ குறிப்பாக சம்பந்தன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறீதரன் போன்றவர்கள் தமிழ்த் தேசியத்தை விட்டுக்கொடுக்காது தமிழ் மருத்துவர்களையும் மருத்துவத் துறை சார்ந்தவர்களையும் தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற வருமாறு அறைகூவல் விடுத்திருக்கவேண்டும்.

தமிழ் மருத்துவர்களும் தாதிமாரும் கிளிநொச்சி மக்களுக்குச் சேவை செய்ய வர மறுப்பது என்பதுகூடத் தமிழ்த் தேசியம் பேசுகிற அரசியல்வாதிகள் தமிழ்த் தேசியத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தவில்லை என்றே அர்த்தப்படும்.

அரசைப் பொறுத்தவரை மருத்துவர்களும் தாதிகளும் இல்லாது மருத்துவமனை ஒன்றை இயக்கமுடியாது. சேவை செய்பவர்கள் தமிழரா, சிங்களவரா என்பதற்கு அப்பால் இந்தப் பிரதேசங்களில் பணியாற்ற தயாராக இருப்பவர்களையே அவர்கள் நியமிக்கின்றனர். இது தவறு என்றால் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் அதற்கான மாற்று ஏற்பாட்டை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அதற்கு முன்னர் தற்போது நியமிக்கப்பட்டுள்ள சிங்கள அலுவலர்கள் தமிழ் படித்து விடவும் வாய்ப்புகளுண்டு. ■

---




# "டிஸ்னி" பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி...?

## வருடக் கடைசியில் வருகிறது அவதார் 2

ஆங்கிலத் திரைப்படக் கலையகமான டிஸ்னி தனக்கென்றே பெரும் இரசிகர் பட்டாளத்தை உருவாக்கி வைத்திருக்கிறது. கொள்ளை அழகும், வர்ணஜாலமும் கொண்டமைந்த டிஸ்னிக்கேயுரிய திரைப் படங்களின் பால் ஈர்க்கப்பட்டவர்களும் பலர். இந்த நிலையில் இந்த வருடத்தில் எஞ்சியுள்ள 2 மாதங்களிலும், அடுத்த வருடத்திலும் தனது தயாரிப்பில் என்னென்ன திரைப்படங்கள் வெளியாகும் என்று "டிஸ்னி" கலையகம் அறிவித்துள்ளது. இதில் டிஸ்னியின் தயாரிப்புகள் மட்டுமல்லாது, சமீபத்தில் அது விலைக்கு வாங்கிய ட்வெண் டியத் சென்சுரி பொக்ஸின் தயாரிப்புகளும் இந்த அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன. இதில் 'அவதார்' படத்தின் இரண்டாம் பாகமும் அடக்கம்.

கொரோனா நிலையும், அதனால் ஏற்பட்டிருந்த திரையரங்க முடக்கமும் கொஞ்சம் கொஞ்சமாக சுமூக நிலையை எட்டிவரும் நிலையில் இதுவரை வெளியிடாமல் ஒத்தி வைத்திருந்த திரைப் படங்களை டிஸ்னி வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இதன்படி, ஒக் ரோபர் 22ஆம் திகதியன்று "தி லாஸ்ட் ட்யூல்", ஒக்ரோபர் 29ஆம் திகதியன்று "ரான்ஸ் கான் ராங் நவம்பர் 5 - எடர்னல்ஸ், நவம்பர் 26இல், என்கான்ட்டோ, டிசம்பர் 10இல் வெஸ்ட் ஸைட் ஸ்டோரி, டிசம்பர் 24இல் தி கிங்ஸ் மேன் ஆகிய திரைப்படங்கள் அடுத்தடுத்து வெளியாக இருக்கின்றன. இதைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டுக்கான வெளியீடுகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி, பெப்ரவரி 11இல், டெத் ஆன் தி நைல், மார்ச் 11இல் டர்னிங் ரெட், மார்ச் 25இல் டொக்டர் ஸ்ட்ரேஞ்ச்: மல்டிவெர்ஸ் ஒவ் மேட்னஸ், மே 6இல் தோர்: லவ் அண்ட் தண்டர், ஜூன் 17இல் லைட் இயர், ஜூலை 8இல் பிளக் பேந்தர்: வகாண்டா போரெவர், ஒக்ரோபர் 7இல் பிளேட், நவம்பர் 11இல் தி மார்வல்ஸ், இறுதியாகப் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ள அவதார் 2ஆம் பாகத்தை டிசம்பர் மாதம் 16ஆம் திகதியிலும் வெளியிட இருக்கிறது டிஸ்னி.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781